www.padippakam.com

டிசம்பர் – 2000
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

# புதிய கலாச்சாரம்



## கிராம வறட்சி நகர வளர்ச்சி?

படிப்பகம்

www.padippakam.com

# செருப்படி

தீபாவளி மிச்சம்மீதி பலகாரங்களை தானதருமம் கொடுப்பதில் தெரு களைகட்டியிருந்தது. உக்கிரவேல் குடும்பத்துக்கு கழனிவேலை செய்யும் சின்னையா வெகு நேரமாக வாசலில் காத்துக் கிடந்தார்.

கையில் முழு அதிரசத்தை ஸ்டியரிங் போல பிடித்துக் கொண்டு 'புர்' என்று பஸ் ஓட்டிக் கொண்டு வந்த மோகன் ''சின்னையா... சந்து வழியா கொல்லப் பக்கம் வரச் சொன்னாங்க'' என்று சொல்லிவிட்டு வாசல்பக்கம் ஓடினான். சந்தை அடைத்துக் கொண்டு நின்ற எருமையை ''தே, தே'' என்று தயவுபண்ணி ஒதுங்கச் சொல்லியவாறே கொல்லை பக்கம் போய் காத்து நின்றார் சின்னையா.

''தே! என்ன அப்படியே நிக்குற, அப்படியே ஒரு இலையை அறுத்துட்டு வந்து உக்காரு'' வீட்டுக்காரம்மா அதட்டலாக கட்டளையிட முகமலர்ச்சியோடு இலையை அறுத்துக் கொண்டு வந்தார் சின்னையா. ''ஏய்! என்னடா இடம் இல்லாதவன் மாதிரி கெடந்து முழிக்கிற, உட்கார்ந்து சாப்பிட உனக்கு இந்த இடம் பத்தாதா?'' கதவு இல்லாத கக்கூசு ஓரமாக உக்கிரவேல் கையைக் காட்ட சின்னையா அப்படியே உட்கார்ந்து கொண்டார்.

மல்லிகைப் பூ போல பளிச்சென்று இருந்த சோறுமேல் கையை வைக்கக் கூசியவாறு, எசமான் வீட்டுச் சோற்றில் அழுக்குப்பட்டுவிடக்கூடாது என்பதுபோல் மேல்துண்டில் கையை மேலும் கீழுமாக துடைத்துக் கொண்டு பிசைய ஆரம்பித்தார்.

குழம்பை ஊற்றியபடி ''நான் மத்தவ மாதிரி கெடையாது, வச்சிக்கிட்டு வஞ்சனை பண்ணவும் தெரியாது, நாலும் கெழமையும் நாலுபேரு கூட சாப்பிட்டுட்டு போவட்டும்னுதான் கூட போட்டு வடிச்சேன். மத்த நாய்ங்களுக்கு கூப்புட்டு வேலை வாங்க மட்டுந்தான் தெரியும். நாளு கெழமையில அழைச்சி மரியாதையா சோறு போட தெரியாது. நீ சாப்புடு. தெருப் பக்கம் புள்ளெ அழுவுற சத்தம் கேக்குது பாத்துட்டு வாறன்'' அவசரமாக நகர்ந்தாள் வீட்டுக்காரம்மா. சாப்பிடும்போதே கதவில்லாத கக்கூசு நாற்றத்தை கிளப்ப சின்னையா சற்று திரும்பி உட்கார்ந்து கொண்டார்.

தெருப்பக்கம் வீட்டுக்காரம்மா சத்தத்துடன் வேறுசில குரல்களும் சேர்ந்து கொண்டது. ''அது என்ன அந்த பசங்களுக்கு திமிரு. யார் வீட்டு புள்ளைய யாரு செருப்பால அடிக்கறது?'' என்னடி சத்தம் என்று வேகமாக வந்து உக்கிரவேல் விசாரிக்க ஆரம்பித்தார். ''நம்ப மோகனு பக்கத்து வீட்டுக்கு போயிருக்கான். அங்க கேரம் போர்டு விளையாடிகிட்டிருந்த அந்த ராசும் செல்வமும் இவன கடைக்கி போகச் சொல்லி இவன் மாட்டேன்னதுக்காக புள்ளமேல செருப்ப தூக்கி எறிஞ்சிருக்காங்கங்கறேன்''

''எவன்டா அவன் புடிச்சி வகுந்துடுவேன் வகுந்து. சின்னப்பையன்னா செருப்பால அடிப்பியா. யார் வீடுன்னு நெனச்ச - வாடா வெளியில'' திமிரிக் கொண்டு போன உக்கிரவேலை தடுத்து இழுத்தனர் தெருக்காரர்கள். ''ஏம்பா படிச்சபுள்ளங்க தான நீங்க. நாளும் கெழமையுமா ஒரு ஆம்பள புள்ள மேல செருப்பால அடிக்கலாமா'' தெருக்காரங்களும் சேர்ந்து நியாயம் கேட்டனர். ''ஆங் திமுரு! சாணிய கரைச்சி ஊத்தி அடிக்கணும் படிச்ச புள்ளையா இருந்தாலும் அவனுக்கு ரோசம் இருக்காது. புள்ள என்னம்மா ஆத்திரத்த அடக்கிட்டு அழுவராங்கறன்.''

ஒருவழியாக தெருக்காரர்கள் சமாதானப்படுத்தி உக்கிரவேலையும் வீட்டுக்காரம்மாவையும் வீட்டுக்குள் அனுப்பி வைத்தனர். நாளும்கெழமையும் அதுவுமா புள்ள ஊர்ல அடிவாங்கணுமா. அவனுவள விட்டுருக்கக் கூடாதுடி'' உக்கிரவேலுக்கு ஆத்திரம் அடங்கவில்லை. ''ஆமாங்கறேன் இவன் வீட்டு வேலைக்காரன் பாரு செருப்பாலடிக்க - பயலுக நின்னுருந்தா என் செருப்பு பிஞ்சிருக்கும்''

வீட்டுக்காரம்மாவின் ஆவேசப் பேச்சைக் கேட்ட சின்னையா ''என்ன தாயி?'' என்றார் பதட்டத்துடன். ''ஆங் பக்கத்து வீட்ல கேரம் போர்டு விளையாடுன நாய்ங்க நம்ம புள்ளமேல செருப்ப எறிஞ்சிருக்காங்கங்கிறன், மனுசனுக்கும் மாட்டுக்கும் மரியாத தெரியாத நாய்ங்க தான''

கக்கூசு பக்கத்திலிருந்து சாப்பிட்ட இலையை எடுத்தவாறு மெலிதாக தனக்குத்தானே ஒரு சிரிப்பு சிரித்துக் கொண்டார் சின்னைய்யா.

சிரிப்பால் அடித்த மாதிரி கோபம் வந்தது உக்கிரவேலுக்கு.

● சுடர்விழி

## முகவரி மாற்ற அறிவிப்பு
## வாசகர்கள், முகவர்கள் கவனத்திற்கு

தோழர்களே,

படைப்புகள், சந்தா மற்றும் விற்பனைத் தொகையை இதுகாறும் இரா. சீனிவாசன், 3, நான்காவது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 600 031 என்ற முகவரிக்கு அனுப்பி வந்தீர்கள்.

புதிய கலாச்சாம் இதழின் நிர்வாக அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

**இரா. சீனிவாசன்,**
**எண். 18, முல்லைநகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற் சாலை, அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**

இதழுக்கான படைப்புகள், சந்தா, பணவிடை, வரைவோலைகள் ஆகிய அனைத்தையும் இனி புதிய முகவரிக்கு அனுப்பக் கோருகிறோம்.

இவண், ஆசிரியர் குழு.

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே**


- போர்: *18*
- குரல்: *7*
- டிசம்பர் - 2000

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9



சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# கிராம வறட்சி, நகர வளர்ச்சி?

நகரமயமாக்கம் என்றால் என்ன? கிராமப்புறத்துக் கூலி, ஏழை விவசாயிகள் நகரத்தின் திரையரங்குகளையும், நியான் விளக்கொளியில் திளைக்கும் கடைவீதிகளையும், பல மாடிக் கட்டிடங்களையும் சுற்றிப் பார்த்துக் களிக்க வரும் சுற்றுலாவா? கிராமங்கள் அலுத்துப் போனதால் வாழ்வில் சுவை கூட்டுவதற்காக நாட்டுப்புற ஏழை மக்கள் துவங்கும் புது வாழ்க்கையா?

''நகரத்தின் வீதிகளில் இடமில்லை, தண்ணீரில்லை, தூய காற்றில்லை, குடியிருக்க வீடுகளில்லை. இந்நிலையில் நாடெங்கும் அன்றடாம் லட்சக் கணக்கான மக்கள் கிராமத்திலிருந்து நகரம் நோக்கி வந்த வண்ணமிருக்கிறார்கள். இதை உடனே தடுத்து நிறுத்தாவிட்டால் நகரங்கள் அழுகி நாறத் தொடங்கிவிடும். இதைத் தடுத்தாக வேண்டும்'' என்று அரசும், ஆளும் வர்க்கங்களும், பத்திரிகைகளும் கூப்பாடு போடுகின்றனர்.

இதைக் கேட்கும் நகரத்து மக்கள் யாருக்கும் ''நல்ல நீரையும் நிலத்தையும் காற்றையும் விட்டுவிட்டு இந்த பாழாய்ப் போன மக்கள் ஏன் நகரத்தை நோக்கிப் படையெடுக்கிறார்கள்?'' என்றுதான் சிந்திக்கத் தோன்றும். கிராமத்தின் ஒண்டுக் குடிசைக்குப் பதில் நடைபாதை வாசம், தூய காற்றுக்குப் பதில் வாகனப் புகை, ஏரி குளத்துத் தண்ணீருக்குப் பதில் சாக்கடைத் தண்ணீர் - கிடைக்க இருப்பவை இவைதான் என்று தெரிந்தேதான் அவர்கள் நகரத்தை நாடி வருகிறார்கள். இப்போதைக்கு நகரம்தான் அவர்களுக்கு எஞ்சியிருக்கும் கடைசி நம்பிக்கை.

வல்லரசுகளின் உலகமயமாக்கம் பெற்றெடுத்த விகாரமான பிள்ளை இந்த நகரமயமாக்கம். எண்பதுகளில் வேகம் பிடித்த நகரமயமாக்கம் இப்போது தொண்ணூறுகளின் இறுதியில் மூச்சுத் திணறத் தொடங்கிவிட்டது. குடிநீருக்கு விலை; கழிப்பிடத்திற்குக் கட்டணம்; நல்ல மூச்சுக் காற்று மணிக்கு நூறு ரூபாய் - எதையும் விலை கொடுத்து வாங்க முடிந்தவர்களுக்கு சொர்க்கம், முடியாதவர்களுக்கோ நரகம். ஒரே நேரத்தில் இரண்டு வண்ணம் காட்டும் பச்சோந்திதான் நகரம். உலகமயமாக்கம் பெற்றுப் போடும் நகர்ப்புறத்துச் சேரிகளுக்கும், பேணி வளர்க்கும் உல்லாசபுரிகளுக்கும் இடையே பேருந்தில் தொங்கியபடி கனவு காண்கிறது நகர்ப்புற நடுத்தர வர்க்கம்.

எனினும் கிராமப்புறத்தின் வாயளவு மனிதாபிமானப் பேச்சுகூட நகரத்திடம் கிடையாது. ''பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை'' என்பதை நீதியாக அல்ல, விதியாக அமல்படுத்துகிறது ஆளும் வர்க்கம். தலைநகர் டெல்லியின் சுற்றுச்சூழல் மாசுபட வாகனப் புகை 70 சதவீதமும், ஆலைப்புகை 12 சதவீதமும் காரணம் என்ற அரசுப் புள்ளி விவரம் ஒருபுறம் கிடக்க, சுற்றுச் சூழலைக் காக்க சிறு தொழிற்சாலைகளை மூடச் சொல்கிறது உச்ச நீதிமன்றம். ஆனால், கார்களின் நடமாட்டத்திற்கு உச்சவரம்பேதும் விதிக்கவில்லை. ஆலை மூடலால் வேலையிழந்த தொழிலாளி வர்க்கத்தின் கோபம் சமீபத்தில் டெல்லியில் வெடித்திருக்கின்றது. சேவைப் பொருளாதாரத்தால் உறிஞ்சப்பட்ட தொழில்துறை, இறக்குமதிக் கொள்கையால் கொல்லப்பட்ட சிறுதொழிற்சாலைகள், தனியார்மயமாக்கம் தோற்றுவித்த வேலையற்றோர் பட்டாளம்... என்ற அடுக்கடுக்கான வெடிமருந்துக் கட்டுகளின் மேல் நகரத்தின் ஆடம்பரக் கார்கள் ஊர்ந்து கொண்டிருக்கின்றன.

இன்னொருபுறம் நீலகிரியில் தேயிலை, ஆந்திரத்தில் பருத்தி, மராத்தியத்தில் வெங்காயம், பஞ்சாபில் கோதுமை, கோவையில் வாழை, தென்னை, தஞ்சையில் நெற்பயிர், தமிழகமெங்கும் கரும்பு, காய்கறிகள்... அனைத்தின் விலைகளும் வீழ்கின்றன. நெற்களஞ்சியங்கள் இறால் பண்ணைகளாகின்றன; காய்கறிப் பாத்திகள் பழத்தோட்டங்கள் மலர்த் தோட்டங்களாகின்றன; கரும்பு காய்ந்த இடத்தில 'கெமிக்கல் காய்' முளைக்கிறது; மர்மமான முறையில் மான்சாண்டோ விதைகள் பரவுகின்றன. மொத்தத்தில் விவசாயம் அழிக்கப்படுகிறது. அதன் விளைவுதான் நகரமயமாக்கம்.

நகரம் தோன்றிய நாளன்றே தோன்றிவிட்டது நகர்ப்புறத்துக்கும் கிராமப் புறத்திற்குமான முரண்பாடு. இன்றைய தீவிர உலகமயமாக்கக் காலகட்டத்தில் முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு முற்றி வருவதற்கு ஒப்ப கிராமம் - நகரத்திற்கு இடையிலான முரண்பாடும் முற்றுகிறது. ''உயிரித் தொழில்நுட்பமும் உணவு இறக்குமதியும் போதும் - உழவுத் தொழில் வேண்டாம்; உலகத் தானியச் சந்தை போதும் - தானியக் கிடங்குகள் வேண்டாம்; நுகர்வோர் போதும் - நுகர்பொருட்களை வாங்க முடியாத விவசாயி வேண்டாம். மொத்தத்தில் வரலாற்றில் குறுக்கிட்ட கெட்ட கனவாக, காற்றில் கலந்து மறையும் புகையாக கிராமப்புறங்கள் மறைந்துவிட வேண்டும் என்று விரும்புகின்றன அரசும், ஆளும் வர்க்கங்களும்.

**கிராமப்புறமோ வெம்புகிறது; விம்முகிறது; புகைக்கிறது. அந்த எரிமலையின் புகைதான் நகரமயமாக்கம். எரிமலை வெடித்த பின்னர்தான் அந்தப் புகை அடங்கும்.**

படிப்பகம்

www.padippakam.com

**தொடர் கட்டுரை: 11**

## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்

# சதி.. சதி.. ஐ.எஸ்.ஐ. சதி!



*''பஞ்சாப், காசுமீர் பிரச்சினைகள் மூலம் பாரதத்தைத் துண்டாடுவதற்கும், பம்பாய் - கோவை தொடர் குண்டு வெடிப்புகள் மூலம் பாரதத்தை சீர்குலைப்பதற்கும், பாகிஸ்தான் இந்நாட்டு முசுலீம்களைப் பயன்படுத்துகிறது. பாகிஸ்தானின் சதி வேலை உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.இன் ஏஜெண்டுகளாக பல முசுலீம் அமைப்புகள் செயல்படுகின்றன.''*

*- கடந்த 20 ஆண்டுகளாக ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரம் செய்து வரும் அவதூறு.*

ஐ.எஸ்.ஐ. எனப்படும் பாக்கின் தேசிய உளவு நிறுவனமான 'இன்டர் சர்வீசஸ் இன்டலிஜென்ஸ்', 'பாரத் மாதாஜீ ஜெய்'யைவிட அதிகமாக ஆர்.எஸ்.எஸ். கும்பலால் ஜெபிக்கப்படும் மூன்றெழுத்து மந்திரமாகும். அவர்கள் மட்டுமல்ல செய்தி ஊடகம், ஓட்டுக் கட்சிகள், அரசு அனைவருமே தேசபக்தி சாமியாட்டத்திற்கு ஐ.எஸ்.ஐ பூச்சாண்டி காட்டுவது ஒரு கேலிக்கூத்தாகி வருகிறது. கட்டுரையாளர் ஒருவர் குறிப்பிடுவதைப் போல 'ரேசன் தட்டுப்பாடு, சுகாதாரக் கேடுகள் போன்றவைக்கும் ஐ.எஸ்.ஐ. தான் காரணம் எனக் கூறும் நாள் தூரத்தில் இல்லை.'

இந்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் முத்திரையாக அறியப்பட்ட ஐ.எஸ்.ஐ. இந்து மதவெறியர்களால் தேசத்துரோகிகளுக்கான முத்திரையாக பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் 12 கோடி முசுலீம் மக்களையும் ஐ.எஸ்.ஐ.யின் ஏஜெண்டுகளாகச் சித்தரித்து தனிமைப்படுத்துவதே அவர்களின் முதன்மையான நோக்கம்.

அடுத்து அரசின் உளவுத்துறை, பாதுகாப்பு படையினரின் முறைகேடுகளை வெளிச்சமாக்கி இந்திய அரசை எதிர்க்கும் மனித உரிமை அமைப்புகள் மற்றும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளை தேசதுரோகி முத்திரை குத்துவது இரண்டாம் நோக்கமாகும். இப்படி ஐ.எஸ்.ஐ. பூச்சாண்டியை வைத்து பெரும்பான்மை மக்களது தேச பக்தி உளவியலை சதித்தனமாக திரட்டி வரும் ஆர்.எஸ்.எஸ். கும்பலின், அவதூறை இடுப்பொடிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

### காலிஸ்தான்: காங்கிரசின் சதி!

பசுமைப்புரட்சியின் மூலம் பணக்காரர்களான சீக்கிய விவசாயிகளுக்கும், ஏற்கனவே பணக்காரர்களாயிருந்த நகர்ப்புறத்து இந்து வியாபாரிகளுக்கும் தோன்றிய முரண்பாடே பஞ்சாப் பிரச்சினையின் அடிப்படையாகும். அந்த முரண்பாட்டைப் பயன்படுத்தி அகாலிதளத்தை வீழ்த்த நினைத்தவர் இந்திரா காந்தி. அதன்படி காங்கிரசு கும்பலால் அகாலிதளத்திற்கு எதிராக வளர்க்கப்பட்டவர் பிந்தரன் வாலே.

ஏற்கனவே பஞ்சாபி மொழி, நதிநீர் பிரச்சினை போன்ற தேசிய இனக் கோரிக்கைகள் சீக்கியர்களுக்கு மட்டுமே சொந்தமானது என பஞ்சாபி மக்களை இந்து, சீக்கியர் என்ற மதரீதியாக பிளப்பதில் காங்கிரசு, இந்துமதவெறி அமைப்புகள் வெற்றி பெற்றிருந்தன. இப்படி பஞ்சாப் பிரச்சினைக்கு அச்சாரம் போட்டு, எண்பதாம் ஆண்டுகள் முழுவதும் பஞ்சாபை ரத்தக் களறியில் மூழ்கடித்தவர்கள் யார்? நிச்சயமாக ஐ.எஸ்.ஐ. இல்லை.

அரசு பயங்கரவாதத்தால் பாதிப்படைந்த சீக்கிய இளைஞர்களை பயன்படுத்துவதற்கே ஐ.எஸ்.ஐ. மூக்கை நுழைத்தது. மேலும் பஞ்சாபில் ஐ.எஸ்.ஐ. நடத்திய சதி வேலைகளைவிட பல மடங்கு கொடூரங்களை நடத்தியது இந்திய அரசுதான். கே.பி.எஸ்.கில் என்ற போலீசு பயங்கரவாதியினால் ஆயிரக்கணக்கான சீக்கிய இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; காணாமலும் போயினர். இன்றைக்கும் பஞ்சாப் மக்களிடம் நீங்கள் யாரை வெறுக்கிறீர்கள் பாக். உளவுப்படையையா, இந்திய பாதுகாப்பு படையினரையா என்று கேட்டுப் பாருங்கள். நூறு சதம் இந்தியா படை என்றே பதில் வரும்.

### காஷ்மீர் யாருடைய சதி?

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் காசுமீர் மக்களின் அவலநிலை ஐ.எஸ்.ஐ. மூலமாகவே நியாயப்படுத்தப்படுகிறது. ''காசுமீர் யாருடன் சேர்வது என்பதையோ, தனிநாடாக இருப்பதையோ நாங்களே முடிவு செய்கிறோம்'' எனும் காசுமீர் மக்களின் கோரிக்கையை இந்தியா ஏற்பதில்லை. சிம்லா ஒப்பந்தப்படியும், ஐ.நா. உடன்படிக்கைப்படியும் பேச்சு வார்த்தை மற்றும் வாக்கெடுப்பு நடத்துவதை இந்திய அரசு மறுத்து வருகிறது. அதையே மூலதனமாக வைத்து பாக்கும் காசுமீர் போராட்டத்தை தனது நலனுக்காகப் பயன்படுத்தி வருகிறது.

இரு நாடுகளும் தமது மக்களின் சமூக பொருளாதார அவலங்களைத் தீர்க்க வக்கின்றி, தேசிய வெறியைக் கிளப்பி விடும் கருவியாக காசுமீரைப் பயன்படுத்துகின்றன. இதில் இந்தியாவின் பங்கே முதன்மையானது.

பாக்கின் உள்ளார்ந்த நோக்கம் கேடானது என்றாலும், காசுமீர் போராட்டத்தை ஆதரிக்கிறோம் என்றும், காசுமீர் புனிதப் போருக்குச் செல்லும் எந்த தனி நபரையும் தடுக்க மாட்டோம் என்றும் வெளிப்படையாக பேசுகிறது. போராளிகளும் ஆசாத் காசுமீர் மற்றும் பாக்கின் பிற பகுதிகளில் மக்களிடம் பிரச்சாரம் செய்தும், நிதி வசூலித்தும், போராளிகளைத் தெரிவு செய்தும் இயங்கி வருகின்றனர். இதில் ரகசியம் எதுவுமில்லை.

ஆனால் காசுமீர் போராட்டத்தை ஐ.எஸ்.ஐ. சதி என்று ஒடுக்கி வரும் இந்திய அரசின் நடவடிக்கைகள் முற்றிலும் சதித்தனமாக இருக்கின்றன. 'தேச பக்தியும் ஜனநாயகமும்' அப்படித்தான் இயங்க முடியுமோ?

### இந்திய இராணுவம் உருவாக்கிய ஐ.எஸ்.ஐ. ஏஜெண்டு

கிளிண்டன் வருகையின் போது காசுமீர் சித்சிங்கபுராவில் 35 அப்பாவி சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலையைச் செய்தவர்கள் பாக் ஆதரவு போராளிக் குழுக்கள் என்று பிரச்சாரம் செய்யப்பட்டாலும் இன்றுவரை அதற்கு சான்றாதாரம் எதுவுமில்லை. மாறாக

**நமது சிறுபான்மை மக்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்துவிட்டால் அவர்கள் ஐ.எஸ்.ஐ—யின் இரையாக சிக்கிவிடுவர் என்கிறார் எல்லைப் பாதுகாப்புப் படையின் உளவுப் பிரிவு ஐ.ஜி. விபூதி நாராயண் ராய். எனவே, கலவரங்கள் மூலம் இந்திய முஸ்லீம் மக்களைத் தனிமைப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ்.தான் ஐ.எஸ்.ஐ.—இன் மிகப்பெரிய ஏஜெண்டுகள் என்பது தெளிவாகிறது.**

படிப்பகம்

www.padippakam.com

இந்திய இராணுவம்தான் செய்தது என்ற விமர்சனத்தையும் ஒதுக்க முடியாது.

சீக்கியர்களைக் கொன்ற 'பயங்கரவாதிகள்' ஐவரை பாத்ரிபால் கிராமத்தில் சுட்டுக் கொன்ற இந்திய இராணுவம், தினத்தந்தி 'போஸில்' மீசையை முறுக்கியது. ஆனால் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி முசுலீம் கிராம மக்கள் என்பது உடன் தெரியவந்து, காசுமீர் மக்கள் வெகுண்டெழுந்தனர். அப்படி பிராக்போராவில் ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களில் 11 பேர் மறுபடியும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இத்துடன் விசயம் முடிந்துவிடவில்லை.

கடந்த ஆக்ஸ்ட் மாதம் உ.பி. மாநிலம் அலிகார் பல்கலைக்கழகத்தில் 'மாலிக்' என்ற லஷ்கர்-இ-தோய்பா (பாக். ஆதரவுக் குழு) போராளி கைது செய்யப்படுகிறார். ''எங்கள் குழுதான் சீக்கியர் கொலை உள்ளிட்ட மூன்று படுகொலை சம்பவங்களை நடத்தியது'' என்று இவர் கொடுத்த வாக்குமூலத்தைக் காட்டி இந்திய இராணுவம் மீண்டும் மீசை முறுக்கியது.


முறுக்கிய வேகத்திலேயே மண்ணில் கவிழ்ந்தது. அலிகர் முசுலீம் பல்கலைக்கழக விடுதியில் மாலிக் தங்கியிருந்தது, அவரது மரணவர் அடையாள அட்டை, வாக்குமூலம் அனைத்துமே இந்திய அரசு உளவுத் துறையினரால் 'செட் அப்' செய்யப்பட்டது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படுகொலைகளை விசாரிக்க காசுமீர் அரசு நியமித்திருக்கும் 'பாண்டியன் கமிசனிடம்' எப்படி திறமையாக பொய் சொல்வது என்று இந்திய இராணுவ மற்றும் உளவுத் துறை அமைப்புகள் தற்போது மண்டை காய்ந்து வருகின்றன. இப்படி காசுமீரை குற்றுயிரும் கொலையுயிருமாக மாற்றியது யார் இந்திய அரசா, ஐ.எஸ்.ஐ.யா?

இந்திய அரசு போட்டுக் கொடுத்த இராஜபாட்டையில் ஐ.எஸ்.ஐ. கம்பீரமாக நுழைந்தது. மதச்சார்பற்ற காசுமீர் போராட்டத்தை இசுலாமிய சார்பாக மாற்றியும், விடுதலைக் குழுக்களை உடைத்து பாக். ஆதரவு குழுக்களாக மாற்றியும் ஐ.எஸ்.ஐ. செயல்படுவதற்கான முகாந்திரத்தை இந்தியாதான் ஏற்படுத்தியது. தற்போது அதிகாரத்திலிருக்கும் இந்துமதவெறியர்கள் மேலும் உதவுகின்றனர்.

சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது லஷ்கர்-இ-தொய்பா குழுவின் அப்துல்லா முன்டாசர், ''பா.ஜ. கட்சி அதிகாரத்திற்கு வரவேண்டுமென இறைவனைத் தொழுகிறோம். அப்போதுதான் நாங்கள் இன்னும் பலமான சக்தியாக உருவாக முடியும்,'' என்று சொல்லியிருந்தார். ஐ.எஸ்.ஐ.யின் நண்பர்கள் இந்திய முசுலீம்களா, இந்து மதவெறியர்களா என்ற கேள்விக்கு இதை விட திருத்தமான பதில் வேறு உண்டா?

## வெள்ளை அறிக்கையும் வெளிறிப்போன அத்வானியும்

சமீபத்தில் சென்னை வந்த இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், பா.ம.க. இராமதாசை சந்தித்தாராம். ராஜ்குமார் கடத்தலையொட்டி இரு மாநில மக்களிடமும் கலவரங்களைத் தூண்டிவிட ஐ.எஸ்.ஐ. திட்டமிட்டிருக்கிறதாம், எனவே அதைவிளக்கி வீரப்பனுக்கு ஒரு கடிதம் எழுதி நெடுமாறனிடம் கொடுத்தனுப்பும்படியும் அமைச்சர் கேட்டுக் கொண்டதாக ஜெ.டி.வி.யில் ஒரு செய்தி வந்திருந்தது. இந்து மதவெறியர்களுக்கு நிகராக இந்திய செய்தி நிறுவனங்களும் இத்தகைய ஐ.எஸ்.ஐ. பூச்சாண்டியை கேவலமாகப் பயன்படுத்தி வருகின்றன. இந்தக் கேவலத்தின் தமிழக உதாரணம் புளுகுணி தினமலர்.



விபூதி நாராயண் ராய்

எதிர்க்கட்சியாக இருந்த போதே ஐ.எஸ்.ஐ. குறித்த உண்மைகளை வெளியிடுமாறு அத்வானி வகையறாக்கள் அடிக்கடி கேள்விக் கணைகள் விடுவது வழக்கம். இப்போது உள்நாட்டுப் பாதுகாப்பையே பொறுப்பேற்று நடத்தும் 'தேசபக்தர்' அத்வானி பதவி ஏற்ற புதிதில் ஐ.எஸ்.ஐ. குறித்த 'வெள்ளை அறிக்கை' விரைவில் வெளியிடப்படும் என சபதம் எடுத்தார்.

எடுத்து மாதங்கள் பல கடந்தும் அறிக்கையை வெளியிடவில்லையே ஏன்? ''எங்கள் வண்டவாளங்களை வெளியிட்டால், உங்கள் உளவுத் துறையான 'ரா'வின் (ரிசர்ச் அன்ட் அனலாசிஸ் விங்) தில்லுமுல்லுகளை வெளியிடுவோம்'' என பாக். அரசு எச்சரிக்கை விடுத்தது. கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக ஆகிவிடுமோ என்றஞ்சிய அத்வானி தற்போது வெள்ளை அறிக்கை குறித்து கேட்டால் நரசிம்மராவ் பாணியில் செத்த பிணம் போல முகத்தை வைத்துக் கொள்கிறார். இரு நாட்டு உளவுத்துறை அதிகாரிகளைப் பொறுத்தவரை 'நாம் இருவரும் திருட்டுப் பேர்வழிகள்தான், சதி வேலை செய்வது - வெற்றி பெறுவது அவரவர் சாமர்த்தியம்' என்ற இராஜதந்திர அறிவோடும் வெள்ளை அறிக்கை தேவையற்ற சர்ச்சைகளை எழுப்பும் என்ற பரஸ்பர புரிதலோடும் இருக்கின்றனர்.

இதுபோக அந்த வெள்ளை அறிக்கையில் 'தினமலர்' பாணி புளுகுகளை அத்வானி புனைந்திருப்பது தற்போது அம்பலமாயிருக்கிறது. முன்னாள் மத்திய அமைச்சர் எட்வர்டோ பெலைரோ பேட்டி ஒன்றில் கீழ்க்கண்ட செய்தியைக் கூறியிருக்கிறார். ''குஜராத் - கட்ச் பகுதியில் உள்ள மதரஸா - மசூதிகளில் சமீபகாலமாக ஐ.எஸ்.ஐ. நடவடிக்கை அதிகரித்திருப்பாக அத்வானி புனைந்திருக்கிறார். குஜராத் உளவுத்துறை ஐ.ஜி அத்வானியிடம் அப்படி ஏதும் தகவல்கள் எங்களுக்கு வரவில்லையே என்று மறுத்திருக்கிறார். வெகுண்டெழுந்த அத்வானி, 'அப்படியெல்லாம் மறுக்கக் கூடாது. செல்லுங்கள் தீர விசாரித்து தகவல்களை (நான் விரும்பியபடி) பெற்று வாருங்கள்'' என்று ஆணையிட்டாராம்.

ஐ.எஸ்.ஐ.யின் சதி வேலைகளை இப்படி சதித்தனமாக புனைந்துரைக்கும் இந்த தேசபக்தத் திலகம் 27.04.2000 அன்று லோக்சபாவில் பேசும்போது ''இந்தியாவை சீர்குலைக்க ஐ.எஸ்.ஐ தொடுத்திருக்கும் ஜீகாத்திற்கு இந்திய முசுலீம்கள் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும்'' என்று கூறினார். அப்படித்தான் இந்திய முசுலீம்கள் தாங்கள்

www.padippakam.com

ஐ.எஸ்.ஐ. ஏஜெண்டுகள் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

**பா.ஜனதா:**
**ஐ.எஸ்.ஐயின் தலைமை ஏஜெண்டு!**

தனது ரதயாத்திரையில் முசுலீம் மக்களின் தலையை நசுக்கி ரத்த யாத்திரை நடத்திய அத்வானியும் அவரது வானரக் கூட்டமும் பாபர் மசூதியை இடித்து, நாடெங்கும் கலவரம் நடத்தி குறிப்பாக பம்பாயில் பல நூறு முசுலீம் மக்களின் உயிரைக் குடித்தனர். 12 கோடி முசுலீம் மக்களை எதிர்த்து பத்தாண்டு காலம் இவர்கள் நடத்திய வெறிக் கலவரங்கள் - கொலைகள் காரணமாகத்தான் இசுலாமியத் தீவிரவாதம் முளைவிட்டது.

'நமது சிறுபான்மை மக்கள் இந்திய அரசின் மீது நம்பிக்கை இழந்துவிட்டால், ஐ.எஸ்.ஐயின் இரையாக அவர்கள் சிக்குவது நடக்கும்' என்கிறார் எல்லை பாதுகாப்பு படையின் உளவுப் பிரிவு ஐ.ஜி. விபூதி நாராயண் ராய் ஐ.எஸ்.ஐ.யின் வலைக்கு பற்றாக் குறை வராமல் இரை தேடிக் கொடுப்பது இந்துமத வெறியர்களே என்பதற்கு இதைவிட என்ன ஆதாரம் வேண்டும்? முசுலீம் மக்களை தனிமைப்படுத்துவதே இந்துமத வெறியர்கள் மற்றும் ஐ.எஸ்.ஐ.இன், ஒரே குறிக்கோளாகும். எனவே ஐ.எஸ்.ஐ.இன் மிகப்பெரிய, அதிகாரபூர்வமற்ற சம்பளம் வாங்காத ஏஜெண்டுகள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, கைது செய்யப்படும் ஐ.எஸ்.ஐ. ஏஜெண்டுகளில் இந்து - சீக்கியர் - கிறிஸ்தவர் என அனைத்து மதங்களைச் சேர்ந்தோரும் இருக்கிறார்கள். ஆனால் அதிலிருக்கும் முசுலீம்கள் மட்டும் வெளிச்சம் போட்டு காண்பிக்கப் படுகிறார்கள். '99 பாராளுமன்ற தேர்தலின் போது பாக்கிற்கு உளவு சொன்னதாக கைது செய்யப்பட்ட உள்துறை அமைச்சக நபர்களில் ஒருவர் கூட முசுலீம் இல்லை. உ.பி., பா.ஜ.க. அமைச்சர் ரகுராஜ் பிரதாப் சிங், ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட் என்றும், உள்ளூர் ரவுடி பிரஜேஷ் சிங் கும்பலுக்கு கணிசமான ஆயுதங்களை வாங்கி கொடுத்திருக்கிறார் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

தாவுத் இப்ராஹிமின் டெல்லித் தளபதியாக செயல்பட்ட ரொமேஷ் சர்மா ஒரு இந்துதான். இவனது கட்டிடத்தில்தான் சேஷனது 'தேசபக்தி அமைப்பு' அலுவலகம் செயல்பட்டது. டெல்லி வாழ் காங், பா.ஜ.க. தலைவர்கள் பலர் இவனோடு தொடர்புள்ளவர்கள்தான். இவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை; ஐ.எஸ்.ஐ. ஏஜெண்டாக அடையாளமும் காணப்படவில்லை.

தாவுதின் தளபதியாக செயல்பட்டு பின் பங்காளிச் சண்டையால் பிரிந்து போனவன் சோட்டா ராஜன். பின்னர் இந்து மதவெறியர்களால் 'இந்து தாதா'வாகப் போற்றப்பட்டான். பாங்காக்கில் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வரும் இவனை தாவுத் கும்பல் சுட்டுக் காயப்படுத்தியது. இவனைக் கைது செய்ய வேண்டுமென்றால் எங்களுக்கு முறையான தகவல் வேண்டும் என்கிறது தாய்லாந்து அரசு. தாவுத்துடன் சேர்ந்தும், பிரிந்தும் இவன் நடத்திய கொலைகள் ஏராளம். மேலும் ஐ.எஸ்.ஐ.யின் வேண்டுகோளுக்கேற்ப பல முறைகேடுகள் நடத்தியவன்.



சோட்டா ராஜன்

தாவூத் இப்ராஹிம்

இவனை இந்தியா கொண்டு வர பம்பாய் போலீசு முயன்றபோது, தேச பக்தர் அத்வானியின் அலுவலகத்திலிருந்து வேண்டாம் என்று உத்திரவு வருகிறது. தாவூதை எதிர்த்துப் போர் நடத்தும் 'இந்து வீரனை', சிவசேனா ஆதரவு பெற்ற ரவுடித் தலைவனை பாசத்தோடு பராமரிக்கிறது பா.ஜ.க. அரசு. தற்போது தாய்லாந்து போலீசிடமிருந்து ராஜன் தப்பி இருக்கிறான். இதற்கு ஏற்பாடு செய்ததே பா.ஜ.க. அரசுதான் என்று குற்றம் சாட்டுகிறார் மராட்டிய அமைச்சர்.

**உளவு வேலை:**
**மேல்சாதி மேட்டுக்குடியின் திறமை!**

நாடறிந்த பிரபலமான இராணுவத் தளவாட தேசத் துரோக வழக்குகளான கூமர் நாராயணன் சதி வழக்கு, போபார்ஸ் பீரங்கி வழக்கு, ஜெர்மன் நீர்மூழ்கி வழக்கு போன்றவற்றில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் கூட முசுலீம் இல்லை. மாறாக காங் - பா.ஜ.க.வைச் சேர்ந்த பல (இந்து) பினாமிகள்தான் குற்றம் சாட்டப்பட்டனர். போபார்ஸ் பணத்தை சுருட்டிய தரகு முதலாளிக் கும்பலான லண்டன் வாழ் இந்துஜா சகோதரர்கள் இந்துமதவெறியர்களின் சர்வதேசப் புரவலர்களாவார்கள்.

அமெரிக்க விண்வெளி நிறுவனம் நாசா, இராணுவத் தலைமையகம் பெண்டகன், இவர்களுக்காக மென்பொருள் தயாரிக்கும் மைக்ரோசாப்ட், இந்நிறுவனங்களில் ஏராளமான 'இந்து' இந்தியர்கள் வேலை செய்கின்றனர். இந்தியா உள்ளிட்டு முழு உலகையும் உளவு பார்க்கும் விண்கோள், மென்பொருள் தயாரிப்பில் ஈடுபடும் இவர்கள் சி.ஐ.ஏ. கைக்கூலிகள் என்று அழைக்கப்படுவதில்லை.

இந்தியாவின் தேசத் துரோக பாரம்பரியத்தில் 'இந்து' மேல்சாதி - மேட்டுக்குடியினரின் பங்கு தான் பெரும்பான்மையானது என்பதை எவரும் மறுக்க இயலாது.

**'ரா' சைவப்புலியா?**

''போதைப் பொருள் கடத்தல், வடகிழக்கு போராட்டம், வங்கதேச - நேபாள - பாக். எல்லை மாவட்டங்களில் சதி'' என ஐ.எஸ்.ஐ. பற்றிய குற்றப்பட்டியலை இந்துமதவெறியர்கள் பாராயணம் செய்வது வழக்கம். ஆயினும் இந்திய உளவுத் துறையான 'ரா'வின் தகிடுதத்தங்களைப் பார்க்கும் போது ஐ.எஸ்.ஐ. ஒரு கொசு என்பது புரியவரும்.

''ரா' அமைப்பு இத்தகைய எதிர்ச் சதி வேலைகளில் ஈடுபடவில்லை என்று சொல்ல மாட்டேன், 'ரா'வை விட ஐ.எஸ்.ஐ. கொடூரமானது, தொழில் முறையில் தீவிரமானது'' என்கிறார் பி.எஸ்.எப்-இன் உளவுத் துறை தலைவர் விபூதி நாராயண்.


படிப்பகம்

www.padippakam.com

இந்தியத் தலைமைக் கணக்காளரின் சோதித்தலுக்கு உட்பட தேவையில்லாத 'ரா'வின் செலவுப் பட்டியல் இரகசியமானது. எத்தனை கோடி போய், எதற்காக செலவழிக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாத ஒன்று. மேற்கண்ட உளவுத் துறை அதிகாரியே 'ரா'வை சைவப்புலி என்று ஒரு பேச்சுக்கு சொல்லக்கூடத் தயங்குகிறார் என்றால் யதார்த்த நிலை எப்படியிருக்கும்?

காசுமீர் போராட்டத்திற்கு பதிலடியாக பாக்கில் நடக்கும் பஞ்சாப் - சிந்தி தேசிய இனப் போராட்டங்கள், முஜாகீர் என்றழைக்கப்படும் இந்தியாவிலிருந்து சென்ற முசுலீம்களின் போராட்டம் ஆகியவற்றை சகல - சதி வேலைகளோடு 'ரா' ஆதரிக்கிறது. லாகூரிலும், கராச்சியிலும் அடிக்கடி நடக்கும் குண்டு வெடிப்புகளை இந்தியா நடத்தியது என பாக். குற்றம் சாட்டுகிறது.

வடகிழக்கிலும், ஈழத்திலும் போராளிக் குழுக்களை ஒன்றுக்கொன்று மோதவிடுவது, அப்பாவி மக்களைக் கொலை செய்யத் தூண்டுவது, டம்மி குழுக்களை உருவாக்குவது என 'ரா'வின் கொலைகார - சதிப் பட்டியல் நீளமானது. அதன் மூலம் இந்தப் போராட்டங்களை முட்டுச் சந்துக்குள் கொண்டு வந்து தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது என்ற தந்திரத்தில் 'ரா' கொட்டை போட்ட பெருச்சாளியாகும். ஒரு வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படை நடத்திய அட்டூழியங்கள் ஏராளம் எனும்போது அண்டை நாடுகளிலும், எல்லை மாநிலங்களிலும் 'ரா' நடத்திய பயங்கரவாதங்கள் பற்றிச் சொல்லி மாளாது.

சி.ஐ.ஏ. தனது சதிப்பின்னலை உலகம் முழுவதும் நடத்த, 'ரா' தெற்காசியாவில் நடத்துகிறது. சென்ற ஆண்டு இஸ்ரேல் சென்று வந்த அத்வானி 'மொசாத்தின்' ஆசிகளையும், பயங்கரவாத தொழில்நுட்பத்தை அளிக்கும் ஒப்பந்தங்களையும் வாங்கி வந்தார். இந்தியாவிலும் எப்.பி.ஐ., சி.ஐ.ஏ. கிளைகள் தற்போது வெளிப்படையாக துவக்கப்பட்டுள்ளன. இனி சி.ஐ.ஏ. மேற்பார்வையில் 'ரா'வின் வேலைகளில் அமெரிக்கத் திறமை பளிச்சிடும்.

எனவே இந்திய முசுலீம் மக்கள் ஐ.எஸ்.ஐ.இன் கைக்கூலிகள் என சித்தரிக்கும் இந்து மதவெறியர்களின் 'தேச பக்த வேடத்தை' தோலுரிக்க வேண்டும். அடுத்து ஐ.எஸ்.ஐ.க்கு தியாக மனப்பான்மை கொண்ட முசுலீம் இளைஞர்களை ஆர்.எஸ்.எஸ். கூட்டமே கையளிக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இறுதியாக இந்த ஐ.எஸ்.ஐ. பூச்சாண்டி முசுலீம்களை மட்டுமல்ல புரட்சிகர - ஜனநாயக - மனித உரிமை அமைப்புக்களையும் துரோகிகளாகச் சித்தரிக்கிறது என்பதையும் அம்பலப்படுத்த வேண்டும்.

**ஆர்.எஸ்.எஸ்.**
**அமெரிக்கக் கைக்கூலிகள்!**

இரண்டாம் உலகப் போர் முடிவுற்று கம்யூனிசம் பரவி வந்த காலம். கம்யூனிசத்தை முறியடிக்க அமெரிக்கா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது.




காஷ்மீர் போராட்டத்தை பாக். ஆதரிப்பதால் அங்கே பகிரங்கமாக ஆளெடுப்பு செய்வதில் ரகசியம் ஏதும் இல்லை. மதச்சார்பற்ற விடுதலைக் குழுக்களை அழித்து இசுலாமிய மதவாதக் குழுக்களை காஷ்மீரில் உருவாக்கிவிட்ட இந்திய உளவுத்துறை நடவடிக்கைகளில்தான் ரகசியம் பொதிந்திருக்கிறது.

அப்போது இந்தியாவில் கம்யூனிச எதிர்ப்பில் தீவிரமாயிருந்த ஒரு இயக்கத்தைக் கேள்விப்பட்ட அமெரிக்கர்கள் முன்னாள் சி.ஐ.ஏ. அதிகாரியான ஜே.ஜே. குர்ரான் என்பவரை 50-களில் அனுப்பி வைத்தனர்.

அவரும் நாகபுரி வந்து ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் தங்கி இரண்டாண்டுகள் ஆய்வு செய்து தன் எஜமானர்களுக்கு தெரிவித்தார். 'மிலிடன்ட் இண்டுயிசம் இன் பொலிட்டிக்ஸ் - (இந்திய அரசியலில் இராணுவ இந்துத்துவம்) என்ற அவரது நூலில், கம்யூனிச எதிர்ப்பிற்காவே இந்திய முதலாளிகள், நிலப்பிரபுக்கள் பலரும் ஆர்.எஸ்.எஸ்.க்கு பணஉதவி அளிப்பதாகவும், இந்தியாவில் கம்யூனிசத்தை வீழ்த்த ஆர்.எஸ்.எஸ். மட்டுமே உள்ளது என பாராட்டும் தெரிவிக்கிறார்.

இப்படி ஆரம்பத்திலேயே ஆண்டையின் விசுவாசத்தைப் பெற்றதனால் இன்றுவரை இவர்கள் அமெரிக்க சேவையை தொடருகின்றனர். அமெரிக்காவில் நடக்கும் ஆர்.எஸ்.எஸ். கூட்டத்திற்கு அமெரிக்க தலைவர்கள் பலர் வருகின்றனர். அமெரிக்க அதிபருடன் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் அடிக்கடி தொடர்பு கொள்கின்றனர். பாபர் மசூதியை இடித்த கையோடு ராம ஜென்ம பூமி தலைவர், கிளிண்டனுக்கு எழுதிய கடிதத்தில், 'நீங்கள்தான் பூவுலகின் தர்மம் காக்க அவதரித்த நவீன கிருஷ்ணர்' என்று உருகுகிறார். இவர்களது அமெரிக்க அடிமைத்தனத்திற்கு ஒரு சமீபத்திய சான்று.

இவ்வாண்டு 'விஜயபாரதம்' (ஆர்.எஸ்.எஸ். வார இதழ்) தீபாவளி மலரில், ஆர்.எஸ்.எஸ்.இன் தென்னிந்திய கொ.ப.செயலரான சண்முகநாதன் என்ற பேர்வழி 'அகண்ட பாரதம் விரைவில் மலரும்' என்ற தலைப்பில் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்.

'ஆசியா 2025' என்ற எதிர்கால உலக அரசியல் நிலைமை பற்றிய ஜோசியம் ஒன்றை அமெரிக்கர் வெளியிட்டிருக்கிறதாம். அதன்படி 2020 ஆண்டிற்குள் பாக்கிஸ்தான் இந்தியாவுடன் சேர்ந்துவிடுமாம். பாக். அணு ஆயுத திட்டங்களை அமெரிக்கா அழிக்குமாம். பாக்குடன் சேரும் சீனாவை அமெரிக்கா மிரட்டி வைக்குமாம். அமெரிக்க இராணுவம் ஆசியாவில் தனது நம்பகமான கூட்டாளியாக இந்தியாவைத் தேர்ந்தெடுத்து சீனாவை ஒதுக்குமாம். இப்படி அமெரிக்கா இந்தியாவை கணித்திருப்பது பற்றி புல்லரிக்கிறார் சண்முகநாதன்.

இந்தியாவின் பல கட்சிகளில் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் இருந்ததுண்டு. ஒரு கட்சியே சி.ஐ.ஏ. ஏஜெண்டாக உள்ளது என்றால் அது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ. கும்பல்தான்.

**- தொடரும்**

படிப்பகம்

www.padippakam.com

## உலகமயமாக்கம்:

# மனிதச் சரக்கின் துயரக் கதை



உன்னுடைய மாத வருமானம் ஆயிரம் ரூபாயா? அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அன்றாடம் பார்க்கிறாயா? அப்படியானால் நீ வலையில் சிக்குவதைத் தடுக்க முடியாது.

— ஒரு ஹாங்காங் கப்பல் முதலாளி

**சென் கான் திங்** 20 வயது இளைஞன். அவனது மாத வருமானம் ஆயிரமல்ல, ஆறாயிரம் ரூபாய். சீனாவின் பியூஜியான் மாநிலத்திலுள்ள ஒரு சிற்றூரில் உணவு விடுதி நடத்தி வந்தான். மீன் மொத்த வியாபாரம் செய்து பணக்காரனாகிவிடலாம் என்று முயன்று சேமித்த பணத்தைத் தோற்றான்.

எனினும் சோற்றுக்கே வழியில்லாமல் போய்விடவில்லை. சொந்த வீடு, தொலைபேசியுடன் தொலைக்காட்சிப் பெட்டியும் இருந்தது. எனவே அந்தக் கப்பல் முதலாளி சொன்னதைப் போல ''வலையில்'' விழுந்தான். எப்படியாவது அமெரிக்கா சென்று முன்னேறிவிட வேண்டும் என்ற வெறி அவனைப் பிடித்துக் கொண்டது.

சட்டபூர்வமான முறையில் தன்னை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து கொள்வதற்கு அவன் ஒரு மருத்துவரோ, கணினி வல்லுனரோ அல்ல; சாதாரணத் தொழிலாளி. எனவே கள்ளத் தோணிதான் தன்னைச் சொர்க்கத்தில் சேர்க்க முடியும் என்று முடிவு செய்தான்.

பாஸ்போர்ட்டும் விசாவும் இல்லாமல் அமெரிக்க சொர்க்கத்திற்கு மனிதர்களை ஏற்றுமதி செய்யும் தொழிலில் கைதேர்ந்தவர்களான ''பாம்புத் தலையர்கள்'' (Snake heads) என்ற சீன மாஃபியாக் கும்பலை அணுகினான்.

17,000 கிலோ மீட்டர் கடல் பயணம். 18 லட்சம் ரூபாய் கட்டணம். அமெரிக்காவில் ஆள் இறங்கியவுடன் பணத்தை சீனாவில் தந்துவிட வேண்டும். இந்த அபாயகரமான பயணத்திற்குத் தன் தாய் சம்மதிக்க மாட்டாள் என்பதால் மகனும் தந்தையும் சேர்ந்து ரகசியத் திட்டம் தீட்டினர். ஒருநாள் இரவு கடையை மூடியவுடன் நேரே கடற்கரைக்குக் கம்பி நீட்டினான் சென்.

●●●

**அது** ஒரு பழைய சண்டைக் கப்பல். அந்தக் கப்பலில் ஒரு சரக்குப் பெட்டகத்தை வாடகைக்குப் பேசியிருந்தார்கள் பாம்புத் தலையர்கள். 40 அடி நீள சரக்குப் பெட்டகத்தில் 100 பேர். அவர்கள் யாருக்கும் ஒருவரையொருவர் அறிமுகம் கிடையாது. எனினும் அவர்களின் லட்சியம் ஒன்றே. அமெரிக்கா - பணம் - முன்னேற்றம். இந்த 'லட்சியவாதிகளில்' சில பெண்களும் ஒரு மூன்று வயதுக் குழந்தையும் அடக்கம்.

சரக்குப் பெட்டிக்குச் சன்னல் கிடையாது. ஒரு மின்விசிறி மட்டும் உள்ளிருந்து காற்றை வெளியேற்றிக் கொண்டிருந்தது. இரண்டே கழிப்பறைகள். எக்காரணம் கொண்டும் பெட்டிக்கு வெளியே யாரும் வரக்கூடாது. ஒருவர் மீது ஒருவர் அடுக்கி வைத்தாற்போலத்தான் தூங்க முடியும். சில நாட்களுக்கு ஒருமுறை உணவுப் பொட்டலத்தையும் தண்ணீரையும் உள்ளே எறிவார்கள். வாரத்திற்கு ஒருமுறை மேல்தளத்திற்கு வந்து உப்புத் தண்ணீரில் குளித்துக் கொள்ளலாம்.

தினமும் இரவு நேரத்தில் இரண்டு பெண்களை மேல்தளத்திற்கு வரச் சொல்வார்கள் பாம்புத் தலையர்கள். காலையில் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். என்ன நடந்திருக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள். அது தங்கள் இலட்சியத்திற்கு அவர்கள் கொடுக்கும் விலை.

தாங்கள் ஏற்றிச் செல்லும் சரக்குகள் மனிதர்களாயிற்றே என்பதற்காக அந்த மாஃபியாக் கும்பல் இரக்கமெதுவும் காட்டவில்லை. மனைவி குழந்தையுடன் அமெரிக்க சொர்க்கத்திற்குப் பயணம் புறப்பட்ட கணவன் ஒருவன் வாந்தி பேதி கண்டு இறந்தான். அழுகிய தக்காளியைப் போலக் கடலில் வீசப்பட்டான். என்றாலும் என்ன? அநாதைகளான மனைவியும் குழந்தையும் சொர்க்கத்தை நோக்கித் தம் பயணத்தைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தப் பயணம் முடியவே முடியாதோ என்ற அச்சம் சென்னுக்கு ஏற்பட்டது. புயலுக்கும், சூறாவளிக்கும் இடையில் மரணத்துடன் போராடியபடியே 35 நாட்கள் இடைவிடாத பயணம். இறுதியாக வட அமெரிக்கக் கண்டத்தின் தென் முனையில் உள்ள கவுதமாலா நாட்டின் கடல் பகுதிக்கு வந்து சேர்ந்தது கப்பல்.

இடுப்பளவு தண்ணீரில் எல்லோரும் இறக்கி விடப்பட்டனர், நள்ளிரவில் நடுக்கடலில் குளிரில் விரைத்தபடியே படகுகள் வருவதற்காகக் காத்து நின்றனர். ஐந்து படகுகளில் அனைவரும் ஏற்றப்பட்டனர். படகுகளை அந்நாட்டின் கடற்காவல் படை துரத்தத் தொடங்கியது. ஒரு படகு கவிழ்ந்து 12 பேர் இறந்தனர். மற்றவர்களுக்கோ அவர்களைத் திரும்பிப் பார்க்கக்கூட நேரமில்லை. இன்னொரு படகு கரை சேர்ந்தவுடனே போலீசு 38 பேரைக் கைது செய்தது.

மீதமிருந்தவர்கள் ஒரு மாஃபியாத் தலைவரின் மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே நிலவறையில் அடைக்கப்பட்டனர். போலீசு கெடுபிடி குறையும் வரை வெளியே வரமுடியாது என்பதால் ஒரு மாதம் சென்னுக்கும் மற்றவர்களுக்கும் அங்கே சிறைவாசம்.

சீன விவசாயிகளின் வாழ்க்கையைக் காட்டிலும் படுமோசமான, வறிய வாழ்க்கையை கவுதமாலா விவசாயிகள் அனுபவிப்பதை சென் அங்கே கண்டான். சீன விவசாயிகளைக் காட்டிலும் தனது ஊரில் சென் பெற்றிருந்த வசதிகள் எவ்வளவோ அதிகம். ஆனால் சோற்றைத் தேடியா அவன் அமெரிக்கா போகிறான்? சொர்க்கத்தைத் தேடியல்லவா இந்தப் பயணம்!

படிப்பகம்

www.padippakam.com

ஒரு மாதம் நிலவறையில் சிறை வாசம். பிறகு சென்னும் அவனுடன் 24 பேரும் ஒரு லாரிக்குள் திணிக்கப்பட்டனர். அது மெக்சிகோவுக்கு திராட்சைப் பழம் ஏற்றிச் செல்லும் லாரி. லாரி நிறைய சரக்கிருந்தது. அடியில் ஒரு அடி உயரத்தில் ஒரு ரகசியத் தளம். அதில் மல்லாந்து படுத்தபடியே 40 மணி நேரப் பயணம். தண்ணீர் உணவு எதுவும் கிடையாது. கை காலை அசைக்கவும் முடியாது. முகத்துக்கு இரண்டங்குலம் மேலே லாரியின் தளம்; முதுகுக் கீழே கரடு முரடான சாலையால் பதம் பார்க்கப்படும் பலகைகள்.

சென்னுக்கு மூச்சு முட்டத் தொடங்கியது. நாட்டை விட்டுக் கிளம்பியதே தவறோ என்று தோன்றத் தொடங்கியது. ஒரு வேளை அமெரிக்கா போய்ச் சேர்ந்து விட்டால் மறுகணமே பயணத்தொகை 18 லட்சம் ரூபாயை வசூல் செய்ய பாம்புத் தலையர்கள் தன் பெற்றோரிடம் போய் நிற்பார்கள். வட்டிக்கு வாங்கிக் கொடுத்து விடுவதாக அப்பா சொல்லியிருந்தார். ஒருவேளை அவரால் பணம் தர முடியாவிட்டால்?

நினைக்கவே அவனுக்குக் குலை நடுங்கியது. பணம் தராதவர்களை போதை மருந்துக் கும்பலிடம் விற்று விடுவார்கள் பாம்புத் தலையர்கள். போதை மருந்துக் கும்பலிடம் சிக்கினால் மீட்சியே கிடையாது. கோஷ்டி மோதலில் சாகலாம்; போலீசில் சிக்கினால் 20, 30 ஆண்டுகள் சிறை.

இல்லையென்றால் பணம் தராத பயணிகளை பாம்புத் தலையர்கள் சுட்டுக் கொன்று விடவும் வாய்ப்புண்டு. மூச்சுத் திணறி லாரியிலேயே சாகப் போகிறோமா, சுட்டுக் கொல்லப்படுவோமா - என்ன வகையான மரணம் என்று அவனது மனம் அலைபாய்ந்து கொண்டிருந்த போதே லாரி நடுக்காட்டில் ஓரிடத்தில் நின்றது.

சென்னும் மற்றவர்களும் மெக்சிகோவைச் சேர்ந்த மாஃபியாக் கும்பலிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏற்கனவே கவுதமாலாவில் 12 பேர் இறந்து, 24 பேர் கைது செய்யப்பட்டிருந்ததால் மெக்சிகோ - அமெரிக்கா எல்லையில் போலீசு கெடுபிடி அதிகமாகி இருந்தது. எனவே இரண்டு மாதங்கள் நடுக்காட்டில் தங்க வைக்கப்பட்டனர்.

பின் திடீரென்று துவங்கியது பயணம். மெக்சிகோ பாலைவனத்தில் சனவரி மாதக் கடுங்குளிரில் கால்நடையாகவே பயணம். குளிர் உறை நிலைக்கும் கீழே போனது. எனினும் தீக்குச்சியைக் கொளுத்தவோ, சிகரெட் பிடிக்கவோகூட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. கிளம்பும்போது அணிந்திருந்த பாண்ட் சட்டை தவிர யாரிடமும் வேறு உடையில்லை. குளிரைச் சமாளிக்க ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டனர்.

ஆறு நாட்கள் நடந்து சோர்ந்த பின் அமெரிக்க எல்லையின் முள்வேலி கண்ணில் பட்டது. கம்பியை வெட்டி 25 பேரையும் சொர்க்கத்திற்குள் தள்ளி விட்டார்கள் மெக்சிகோ மாஃபியாக்காரர்கள். கறுப்புநிற வேன் ஒன்று அவர்களை அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்தது.

முதன்முதலாக அமெரிக்க நகரமொன்றைப் பார்த்தான் சென். அது ஹூஸ்டன். அங்கிருந்து மறுநாள் லாஸ் எஞ்செல்ஸ் பயணம். லாஸ் எஞ்செல்லை அடைந்தவுடன் ஒரு அறைக்குள் அவனைச் சிறை வைத்தார்கள் பாம்புத் தலையர்கள். அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்துவிட்ட செய்தியை தொலைபேசி மூலம் சீனாவில் உள்ள பெற்றோருக்குத் தெரிவிக்கச் சொன்னார்கள்.

**மனைவி குழந்தையுடன் அமெரிக்க சொர்க்கத்திற்குப் பயணம் புறப்பட்ட கணவன் ஒருவன் வாந்தி பேதி கண்டு இறந்தான். அழுகிய தக்காளியைப் போலக் கடலில் வீசப்பட்டான். என்றாலும் என்ன? அநாதைகளான மனைவியும் குழந்தையும் சொர்க்கத்தை நோக்கித் தம் பயணத்தைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை.**

மகனுடையே குரலைக் கேட்டவுடனே தொலைபேசியிலேயே கதறி அழத்தொடங்கினாள் அவன் தாய். கள்ளத் தோணியில் சென்ற 12 சீனர்கள் கவுதமாலா அருகே கடலில் மூழ்கி இறந்தனரென்று செய்தித்தாளில் படித்தது முதல், தனது மகனும் இறந்திருப்பானோ என்று இரண்டு மாதங்களாக அழுது கொண்டிருந்த தாய்க்கு மகனின் குரல் ஒரு ஆறுதல். தந்தைக்கோ அச்சம்.

பாம்புத் தலையர்களின் ஆட்கள் வருவார்கள். அமெரிக்காவில் ஆளைச் சேர்த்தவுடனே 18 லட்ச ரூபாய் தந்துவிட வேண்டும் என்பது பழைய ஒப்பந்தம். இப்போது தங்களது சரக்குகளில் 12 இறந்து போய்விட்டதாலும், 28 போலீசில் பிடிபட்டுவிட்டதாலும் கட்டணத்தைக் கூட்டிவிட்டார்கள் பாம்புத் தலையர்கள். 25 லட்சம் ரூபாய் தரவேண்டும், தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் சென்னுக்கு ஆபத்து.

அலைந்து திரிந்து கந்து வட்டிக்குக் கடன் வாங்கி 25 லட்சம் ரூபாயைக் கொடுப்பதற்கு அவருக்கு இரண்டு வாரங்கள் தேவைப்பட்டது. அதுவரை லாஸ் ஏஞ்செல்சில் சிறை வைக்கப்பட்டிருந்த சென், பணம் கைமாறியவுடனே நியூயார்க்கில் கொண்டு விடப்பட்டான்.

நகரம் முழுவதும் அலைந்து திரிந்து சீனர்கள் வசிக்கும் பகுதியைக் கண்டுபிடித்து, ஒரு சீன முதலாளி நடத்தும் உணவு விடுதியில் வேலைக்கும் சேர்ந்து விட்டான். பாத்திரம் கழுவ வேண்டும், தரை துடைக்க வேண்டும், காய்கறி நறுக்க வேண்டும். ஒரு நாளைக்கு 13 மணி நேரம் வேலை. மாதம் 1400 டாலர் (70,000 ரூபாய்) சம்பளம்.

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி கடன் அடைக்க பெற்றோருக்கு பணம் அனுப்புகிறான்; 25 லட்சம் ரூபாய் கடனும் வட்டியும் எப்போது அடையும்? மிக வேகமாக அடைத்தாலும் 8, 10 ஆண்டுகள் ஆகலாம்.

அமெரிக்க அரசைப் பொறுத்தவரை அவன் ஒரு கள்ளத்தோணி. பிடிபட்டால் திருப்பி அனுப்பிவிடுவார்கள். என்ன கொடுமை நடந்தாலும் கடை முதலாளியை எதிர்த்துப் பேச முடியாது. எதிர்த்தால் அவன் போலீசுக்கு காட்டிக் கொடுத்து விடுவான்.

எனினும் சென்னுக்கு மட்டும் இந்த நிலைமை இல்லை. அந்தச் சிறிய கடையில் அவனுடன் வேலை செய்யும் 17 சீனர்கள், 5 வங்காள தேசத்துக்காரர்கள், ஒரு இந்தியன் எல்லோரும் 'கள்ளத்தோணிகள்'தான் என்பதில் அவனுக்கு ஒரு ஆறுதல்.

நினைத்துப் பார்த்தால் நாம்தான் இந்தச் சாகசத்தைச் செய்தோமா என்று அவனுக்கே சந்தேகம் வருகிறது. 14,000 கிலோ மீட்டர் கடல் பயணம் - கவுதமாலாவில் சிறை - மெக்சிகோ காட்டில் இரண்டு மாதம் - பாலைவனத்தில் நடைபயணம் - கடைசியில் மொழி தெரியாத - பண்பாட்டால் வேறுபட்ட - அறிமுகமான மனிதர்களே இல்லாத இந்த நாட்டில் அமெரிக்காவில் ஒரு வேலை!

இனி வாழ்க்கை எப்படிச் செல்லும்?

www.padippakam.com

குடியுரிமை கிடைக்குமா, திருமணம் உண்டா, குழந்தைகள் பெற்றுக் கொண்டால் அவர்களை என்ன செய்வது, வாழ்க்கையில் மீண்டும் ஒரு முறை தாய்நாடு செல்ல முடியுமா, பெற்றோர்களைப் பார்க்க முடியுமா... தெரியாது. இந்தக் கேள்விகள் எதற்கும் அவனுக்கு விடை தெரியாது.

இப்போதைக்கு அவனுக்குத் தெரிவது ஒன்று மட்டும்தான். அவன் வெற்றிகரமாக வந்து சேர்ந்து விட்டான். டாலரைத் தொட்டுப் பார்த்து விட்டான்.



**14,000 கிலோ மீட்டர் கடல் பயணம் – கவுதமாலாவில் சிறை – மெக்சிகோ காட்டில் இரண்டு மாதம் – பாலைவனத்தில் நடைபயணம் – கடைசியில் மொழி தெரியாத – பண்பாட்டால் வேறுபட்ட – அறிமுகமான மனிதர்களே இல்லாத இந்த நாட்டில், அமெரிக்காவில் தட்டுக் கழுவும் வேலை!**

•••

ஒரு வகையில் சென் அதிருஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும். அதே பியூஜியான் மாநிலத்திலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் பறப்பட்ட 18 வயது **ஜின் சிகாய்** ஒரு 'துரதிருஷ்டசாலி'.

தொலைபேசி மெக்கானிக்கான ஜின் தரைவழியே இங்கிலாந்து செல்ல 'பாம்புத் தலையர்'களிடம் 15 லட்ச ரூபாய் கொடுத்திருந்தான். பீகிங்கிலிருந்து ரயிலில் மாஸ்கோ; அங்கிருந்து லாரி, குதிரை வண்டியில் செக்கோஸ்லோவாகியா, அங்கிருந்து அப்படியே ஜெர்மனி, ஹாலந்து. தேவையான போலி ஆவணங்களைத் தயாரித்திருந்தார்கள் பாம்புத் தலையர்கள்.

கைச் செலவுக்குப் பணம் அனுப்புமாறு ஜூன் 10-ம் தேதி ஹாலந்திலிருந்து வீட்டுக்குப் போன் செய்தான் ஜின். ''தொண்ணூறு சதவீதம் பயணம் முடிந்துவிட்டது. ஹாலந்திலிருந்து பெல்ஜியம். பிறகு இடையிலிருப்பது ஆங்கிலக் கால்வாய். அதைக் கடந்தால் இங்கிலாந்துதான்.'' பெற்றோர்களுக்குப் பெரு மகிழ்ச்சி.

ஆனால் ஜூன் 18-ம் தேதி இங்கிலாந்திலிருந்து வெளியான செய்தி சீனாவையே அதிர்ச்சியிலாழ்த்தியது.

பெல்ஜியத்திலிருந்து தக்காளி ஏற்றி வந்த சரக்குப் பெட்டகத்தைச் சந்தேகத்தின் பேரில் சோதனை போட்டார்கள் பிரிட்டிஷ் சுங்க இலாகா அதிகாரிகள். தக்காளிகளை நகர்த்திவிட்டுப் பார்த்தால் ஒன்றன்பின் ஒன்றாக 54 மனித உடல்கள். அனைவரும் சீனர்கள்.

பெட்டகத்திலிருந்த ஒரேயொரு சன்னலும் வெளிப்புறமாக மூடிக் கொண்டு விட்டதால், மூச்சுத் திணறி, பெட்டகத்தின் சன்னலை மோதித் திறக்க முயன்று தோற்று, உடலில் நீர்வற்றி அதைச் சமாளிக்க தக்காளிகளைக் கடித்து உறிஞ்சி அதுவும் பயனின்றி மூச்சுத் திணறி துவண்டு செத்திருக்கிறார்கள்.

செத்தவர்கள் பெயரென்ன, ஊரென்ன, இந்தப் பெட்டகத்தை யார் யாருக்கு அனுப்பினார்கள் என்று எந்த விவரமும் தெரியாது. பிணங்களின் புகைப்படத்தைப் பார்த்துத்தான் தன் மகனின் மரணத்தை உறுதி செய்து கொண்டார்கள் ஜின்னின் பெற்றோர்கள்.

இது ஒரு துரதிருஷ்டசாலியின் கதை.

•••

பிரான்சு நாட்டின் மேற்குக் கடற்கரையில் உள்ள கிராமம் **சான்கேட்.** ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் புனித யாத்திரைக்கு வந்த பக்தர்கள் போல அந்தக் கிராமத்தில் குழுமியிருக்கிறார்கள். ஒரே கூரையின் கீழ் உலகின் அனைத்து மொழிகளும், கலாச்சாரங்களும் உயிருடன் காணக் கிடைக்கும் அருங்காட்சியகம் அது. உண்மையான உலக கிராமம்.

கடவுச்சீட்டும் நுழைவுச் சீட்டும் இல்லாமல் இங்கிலாந்துக்கும், அங்கிருந்து அமெரிக்காவுக்கும் செல்லக் காத்திருக்கும் அந்தப் பயணிகளுக்காக செஞ்சிலுவை சங்கம் ஒரு மண்டபம் கட்டிக் கொடுத்திருக்கிறது. இந்த பெட்டகச் சாவுகளைப் பார்த்த பிறகும் இத்தகைய அபாயகரமான பயணம் குறித்து அவர்கள் அஞ்சவில்லையா?

இந்த மரணங்கள் மரத்துவிட்டன. எல்லைக் காவற்படையிடமிருந்து தப்பிப்பதற்காகப் படகின் எடையைக் குறைத்து, உறைபனி நீரில் வீசியெறியப்பட்டு விரைத்துச் சாவோர் ஒவ்வொரு ஆண்டும் பலநூறு பேர். இவை கணக்கில் வராத சாவுகள். இத்தாலியின் கடற்பரப்பில் மட்டும் இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் 180 பேர்.

டோவர் நகரின் இந்தப் பெட்டகச் சாவு நடப்பதற்கு நான்கு நாட்கள் முன் ஒரு டச்சு அமைப்பு 'ஐரோப்பாவில் நுழைய முயன்று இறந்தோர் இதுவரை 2000 பேர்' என்று புள்ளி விவரம் வெளியிட்டிருந்தது. டோவர் சாவுடன் சேர்த்து 2054.

''இது ஒரு வகையான 'சி.என்.என் விளைவு (C.N.N.'- அமெரிக்கத் தொலைக்காட்சி). தங்கள் எதிர்காலத்தை அமெரிக்கக் கண்ணாடியின் வழியே பார்க்கப் பழகிவிட்டதன் விளைவு'' என்று விமரிசிக்கிறார் சான்கேட் நகரிலுள்ள செஞ்சிலுவை சங்கத்தின் அதிகாரி.

''வயது இருபதாகப் போகிறது. இன்னும் ஏன் இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறாய். அமெரிக்கா போக வேண்டியதுதானே'' என்று அறிவுரை கூறுவது சீனாவின் பியூஜியான் மாநிலத்தில் சகஜமாகிவிட்டது என்கிறார் ஒரு சீனப் பேராசிரியர்.

அமெரிக்க மோகம் பிடித்தவர்களை இந்தச் சாவுகள் அச்சுறுத்துவதில்லை. 'சொர்க்கத்திற்குச் செல்ல விரும்புபவன் சாவுக்கு அஞ்சக் கூடாது' என்று எண்ணுகிறார்கள் போலும்!

படிப்பகம்

www.padippakam.com

ஐரோப்பாவிலோ இச்சாவுகள் அப்போதைக்கு ஒரு பரபரப்புச் செய்தி. திருவிழாவில் கூழ் ஊற்றும் பண்ணை யாரின் பேரப் பிள்ளைகள், கூழுக்கு அடித்துக் கொள்ளும் ஏழைகளை எப்படிப் பார்க்கிறார்களோ அப்படிப் பார்ப்பதற்குத்தான் அமெரிக்க, ஐரோப்பிய மக்களைப் பழக்கியிருக்கின்றன தகவல் தொடர்பு சாதனங்கள்.

''உலகத்தில் உள்ள ஏழைகளுக்கெல்லாம் நாங்கள் உயிர் காக்கும் படகாக முடியாது'' என்று சலித்துக் கொள்கிறார் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் உழைப்பையும் இயற்கை வளங்களையும் இரண்டு நூற்றாண்டுக் காலம் சூறையாடிச் சேர்த்த சொத்தின் மீது அமர்ந்து கொண்டு இவ்வாறு பேசுவதற்கு எத்தனை திமிர் இருக்க வேண்டும்? உலகத்தையே பரிபாலனம் செய்யும் பெரும் பொறுப்பைக் கடுகளவும் விருப்பமில்லாமல் தன் தோளில் சுமந்து கொண்டிருப்பதாகக் கூறும் ஏகாதிபத்தியவாதியின் கருத்து இது.

18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆசிய ஆப்பிரிக்க அடிமைகளை வைத்துத்தான் தம் புதிய சாம்ராச்சியத்தை உருவாக்கிக் கொண்டன அமெரிக்காவும் பிரிட்டனும். இருபதாம் நூற்றாண்டில் கடினமான, 'தரம் தாழ்ந்த' வேலைகளைச் செய்ய கறுப்பு, பழுப்பு நிற மக்கள் இறக்குமதி செய்யப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் காலனி நாட்டு மக்கள் விடுதலைக்குப் போராடத் துவங்கிய பின், குடியேற்றத்தைத் தடுத்தது ஐரோப்பா. சமமான குடிமக்களாக ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் தம்முடன் வாழ்வதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு அடிமைகள் மட்டுமே தேவைப்பட்டனர்.

●●●

இப்போதோ மறுகாலனியாக்கக் காலம். தானே விரும்பி மனமுவந்து வருகிறார்கள் அடிமைகள். 'வேறு வழியின்றி' ஏற்றுக் கொள்வது போலப் பாசாங்கு செய்கிறார்கள் ஏகாதிபத்தியவாதிகள்.

கள்ளத் தோணிகளிலும், சரக்குப் பெட்டிகளிலும் பயணம் செய்து சட்டவிரோதமாகத் தங்கள் நாட்டில் நுழையும் ஏழை நாட்டு உழைப்பாளர்களை அவர்கள் தடுக்கவில்லை. கள்ளச் சாராயத்தைப் பிடிக்கும் போலீசைப் போல அந்தப் பக்கம் திரும்பிக் கொள்கிறார்கள். அவ்வப்போது கணக்குக்கு 'கேஸ்' பிடிக்கிறார்கள். சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தாங்கள் விரும்பாததைப் போல நடிக்கிறார்கள்.

ஈராக்கின் குழந்தைகளுக்கு ஒரு பால் பவுடர் டப்பாவோ, ஒரு மாத்திரையோ கூட செல்லவொட்டாமல் தடுத்து ஆயிரக் கணக்கான குழந்தைகளைப் பட்டினி போட்டுக் கொன்ற அமெரிக்கா, சதாம் உசேனின் மாளிகையை விண்ணிலிருந்தே வேவு பார்த்து குண்டு வீசும் தொழில்நுட்ப ஆற்றல் பெற்ற அமெரிக்கா, சீனா - ரசியா போன்ற நாடுகளிலிருந்து ஒரு நபரோ ஒரு பத்திரிகையோ கூடத் தன் நாட்டில் நுழைந்துவிடாமல் இரும்புத்திரை போட்டு வைத்திருந்த அமெரிக்கா - இந்தக் கள்ளத் தோணிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுவது எத்தகைய பித்தலாட்டம்?

''சொல்லப் போனால் இந்தச் சட்டவிரோதக் குடியேற்றத்தால் அவர்களது பொருளாதாரத்திற்கு லாபம்தான். அவர்களுக்கு மலிவான கூலியில் தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள். எதற்காக இந்த பிரிட்டிஷ்காரர்கள் சும்மா அலட்டுகிறார்கள்?'' என்று சர்வ சாதாரணமாக குட்டை உடைக்கிறார் சான்கேட் கிராமத்தில் காவல் இருக்கும் ஒரு போலீசுக்காரர்.

ஏழை நாடுகளின் தொழிலாளர்களைக் குறைந்த கூலிக்கு வேலைவாங்க முடியுமென்பதால் அங்கெல்லாம் மூலதனத்தை ஏற்றுமதி செய்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள்; தம் சொந்த நாட்டில் குறைந்த கூலிக்கு எடுபிடி வேலை செய்வதற்காக ஏழை நாட்டுத் தொழிலாளர்களை இறக்குமதியும் செய்கின்றன.

சீனா, பிலிப்பைன்ஸ், இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் அரசுகளோ, தம் மக்கள் கள்ளத் தோணியேறி திரைகடலோடி திரவியம் தேடுவதையே விரும்புகின்றனர். அந்நியச் செலவாணி பற்றாக்குறையை ஈடுகட்ட அவர்களுக்கு டாலர் தேவை. கள்ளத் தோணியேறி அமெரிக்கா செல்லும் சீனர்கள், பியூஜியான் மாகாணத்திலிருந்து மட்டும் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர்.

ஏகாதிபத்தியச் சுரண்டலால் ஏற்படும் அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்க இன்னும் கொடூரமான ஏகாதிபத்தியச் சுரண்டலால் கிடைக்கும் டாலர் பயன்படுகிறது. கந்துவட்டி கட்டமுடியாதவன் பெண்டாட்டியை அடமானம் வைத்த கதை இது.

என்ரான், போர்டு, மைக்ரோ சாப்ட் முதலாளிகள் எல்லை கடந்து எந்த நாட்டிற்குள்ளும் நுழையலாம். தொழில் தொடங்கலாம். ஆனால் தொழிலாளர்கள் எல்லையைக் கடக்கக் கூடாது. இதுதான் உலகமயமாக்கக் கொள்கையின் நீதி.

மூலதனத்திற்கு தேசம் இல்லை, அரசு இல்லை. உழைப்புக்குத் தேசம் உண்டு — சுரண்டுவதற்கு; அரசு உண்டு அடக்குவதற்கு.

மூலதனம் சந்தையைக் கைப்பற்ற கள்ளத்தோணி ஏறினால் அதன் பெயர் ராஜதந்திரம் அல்லது போர். உழைப்பு தன்னை சந்தையில் விற்றுக் கொள்ளக் கள்ளத் தோணி ஏறினால் அது குற்றம்!

குற்றவாளிகளை உள்ளூர் போலீஸ்காரன் நேசிப்பதைப் போலவே உலகப் போலீஸ்காரனும் நேசிக்கிறான். அவர்கள் அளிக்கும் இலஞ்சம் — மலிவான உழைப்பு.

உலகமயமாக்கமும் தகவல் தொழில்நுட்பப் புரட்சியும் உலகத்தையே கிராமம் ஆக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். உலகம் கிராமம் என்றால் நம்மைப் போன்ற நாடுகள் அந்தக் கிராமத்தின் சேரி.

● சூரியன்

**ஸ்விட்சர்லாந்து: உரிய ஆவணங்கள் இல்லாமல் சிக்கிய ஒருவரை கிரிமினலைப் போல வளைத்துப் பிடிக்கிறது ஸ்விஸ் போலீசு.**




படிப்பகம்

www.padippakam.com

# திருத்த முடியுமா? நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட பின், வீரப்பனைப் பிடிப்பதற்காக ஏவிவிடப்படும் அதிரடிப் படையின் அதிகாரிகள் கூறியதாக பத்திரிகைகளில் சில செய்திகள் வந்துள்ளன. மனித உரிமை அது இது என்று தங்கள் கைகள் கட்டப்படுவதாகவும், இத்தகைய 'தொல்லைகள்' இல்லாமல் தாங்கள் சுதந்திரமாக விடப்பட்டால் பத்து எண்ணுவதற்குள் வீரப்பனைக் கொண்டு வந்து விடுவோம் என்பது போலவும் பேசியிருக்கிறார்கள் அந்த அதிகாரிகள். அவர்கள் **சுதந்திரமாக** இயங்கும்போது என்ன நடக்கும் என்பதை இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

கருப்பினத்தைச் சேர்ந்த ஒரு கைதியின்மேல் நாய்களை ஏவிவிட்டு, கடித்து குதறுவதை பார்த்து அனுபவித்து மகிழும் தென்னாப்பிரிக்க வெள்ளை நிறவெறி போலீசுகாரர்களின் வக்கிரத்தை பார்த்து சமீபத்தில் உலகமே அதிர்ச்சிக்குள்ளானது. இப்படி சர்வதேச அளவுக்கு அதிர்ச்சியூட்டும் செய்திகள் எத்தனை வேண்டும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சவால்விட்டு நிற்கும் தமிழக காவல்துறையின் சட்டவிரோத, மனித விரோத வக்கிரங்களை வகைபிரித்து பட்டியலிட்டு காட்டுகிறது ''தமிழகத்தில் மனித உரிமைகள் 1998-2000'' என்ற நூல்.

இரண்டாண்டுகளில் வெளிஉலகிற்கு கசிந்தவைகள் மட்டும் 340 பக்கங்களை கொண்ட நூலாக தடித்து நம் கைக்கு வந்திருப்பதை பார்த்தால், ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வரும் போலீசின் சட்டவிரோத - சமூகவிரோத செயல்களை தொகுத்தால், அது இந்திய அரசியல் சட்டத்தொகுப்பின் பக்கங்களைத் தாண்டி சவால்விடும் என்றால் அது மிகையல்ல.

பெண்கள் சிறுவர்கள் மீதான காவல், சிறைத்துறையின் கொடுஞ் செயல்கள், சாதிய வன்முறை, சிறுபான்மையினர், அகதிகள் மீதான மனித உரிமை மீறல்கள் என மொத்தம் பன்னிரண்டு தலைப்புகளில் போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் மனித உரிமை மீறல்களை ஆதாரங்களுடன் தொகுத்தளிக்கிறது இந்த நூல்.

விசாரணைக்கு அழைத்து செல்பவர்களை லாடம் கட்டுவது, உலக்கையை வைத்து உருட்டுவது, கால்களை விரித்து பிளப்பது, ஆண், பெண் குறிகளில் மின்சாரம் பாய்ச்சுவது என்ற போலீசின் விதம்விதமான வதைமுறைகளை பார்க்கும்போது போலீசுக்கு மனித உரிமைகளை கற்றுக் கொடுப்பது கேலிக் குறியதாகி அவர்களை முதலில் மனிதர்களாக மாற்ற என்ன செய்வது என்று யோசிக்க வைக்கிறது.

பொழிப்புரைகள் தேவையில்லை - இந்த நூலில் இடம்பெற்றுள்ள புள்ளி விவரங்களே போலீசு என்ற சட்டப்பூர்வ கிரிமினல் கும்பலை இனியும் விட்டு வைக்க முடியுமா என்ற கேள்வியை நம்முன் எழுப்புகிறது. உதாரணத்திற்கு, சந்தன கடத்தல் வீரப்பனை பிடிக்கிறோம் என்ற சாக்கில் சிறப்பு அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்ட ஒரு சிலரின் அவலத்தை நீங்களே படியுங்கள்.

**நூல் அறிமுகம்:**
**தமிழகத்தில் மனித உரிமைகள் 1998-2000**




(1) இலட்சுமி (40), க/பெ. இராஜேந்திரன், லக்கம்பட்டி, மேட்டூர் வட்டம். (நூல், பக்:61)

கடந்த 1993-ஆம் ஆண்டு ஒருநாள் காலையில் கர்நாடகா சிறப்பு அதிரடிப் படை போலீசார் லட்சுமியின் வீட்டிற்கு வந்து அவர் வீரப்பனின் ஆசைநாயகியாக இருந்தவர் என்று கூறி அங்கேயே லட்டியால் அடித்து, கைகளை பின்புறமாகக் கட்டியதுடன், கண்களையும் கட்டி போலீசு ஜீப்பில் ஏற்றி மாதேஸ்வரன் மலை போலீசு நிலையத்திற்கு கொண்டு வந்து 20 நாட்கள் சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைத்து சித்திரவதைகள் செய்தனர்.

அவரை நிர்வாணமாக்கி அவரது காது, மூக்கு, உதடு, மார்பு, தொப்புள், தொடை, முதுகு, பிறப்புறுப்பு முதலான உறுப்புகளில் கிளிப் மாட்டி, மின் அதிர்ச்சி கொடுத்ததில் அவருக்கு மிகுந்த இரத்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும், அவரை அந்த நிர்வாண நிலையிலேயே வைத்து லட்டி முறிந்து போகும் வரையில் விடாமல் அடித்து, கால்களில் இலாடம் கட்டி உள்ளனர். மேலும், துப்பாக்கி முனையால் அவர் பிறப்புறுப்பில் பல முறை குத்தியிருக்கின்றனர். அப்போது, ''நீ வீரப்பனின் வைப்பாட்டி தானே!'' எனச் சொன்னதோடு, அசிங்கமான வார்த்தைகளால் கேவலமாக திட்டி கேலி பேசியிருக்கின்றனர். அவரது மார்பை கிள்ளியும், சீண்டியும் தரக்குறைவாக பேசினர். அவர் மலங்கழிக்கச் செல்லும்போதும் கூட ஒரு போலீசுகாரர் முன்னால் நின்று கொண்டு அவரது பிறப்புறுப்பைப் பார்த்துக் கொண்டே அசிங்கமாக கேலி செய்து பேசியுள்ளார்.

மேலும், மின் அதிர்ச்சி கொடுக்கும் கிளிப்பை லட்சுமியிடம் கொடுத்து, அங்கு நின்ற ஆண் கைதிகளின் ஆண்குறிகளில் மாட்டி மின் அதிர்ச்சி கொடுக்க வைத்துள்ளனர். ஏற்கனவே நிர்வாணமாக இருந்த மற்றப் பெண்களுடன் சேர்த்து அவரையும் வட்டமாக உட்கார வைத்து ஒருவருடைய , கைகளை . மற்றவருடன் பிணைத்து மின் அதிர்ச்சி கொடுத்திருக்கின்றனர். அவர்கள் முன்னிலையில் 7 வயது சிறுவனையும், 10 வயது சிறுமியையும் உடலுறவு கொள்ளச் செய்து ரசித்ததோடு அவர்களது பிறப்புறுப்பிலும் மின் அதிர்ச்சி கொடுத்திருக்கின்றனர்.

இருபது நாட்கள் சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைக்கப்பட்ட பின் அவரை சிறப்பு அதிரடிப்

www.padippakam.com

படை போலீசார் அவரது வீட்டிற்கு அடிக்கடி வந்து மூக்காடு, பாலாறு பகுதிகளுக்குக் கொண்டு போய் வன்புணர்ச்சி மேற்கொண்டுள்ளனர். இதற்கு அவர் மறுக்கும் போது லட்டியாலும், துப்பாக்கியாலும் அடித்து அவர்களின் வக்கிரத்திற்கு இணங்க வைத்திருக்கின்றனர்.

2. கிருஷ்ணன், பெரியதண்டா, மேட்டூர் வட்டம் (நூல், பக்: 65)

கிருஷ்ணன் பெரியதண்டா கிராமத்தில் வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தார். அவருக்கு மாதி என்ற மனைவியும், இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர்.

கடந்த 1993-ஆம் ஆண்டு ஒரு செவ்வாய்கிழமையன்று மதியம் 12 மணிக்கு கிருஷ்ணன் கொளத்தூரில் ரேடியோ ரிப்பேர் கடையில் உட்கார்ந்திருந்த போது, தமிழக சிறப்பு அதிரடிப் படை போலீசார் அவரைப் பிடித்துச் சென்று மேட்டூர் பள்ளிக்கூட முகாமில் 7 நாட்கள் தொடர்ந்து வைத்திருந்து, ''நீ வீரப்பனுக்கு அரிசி, பருப்பு கொடுத்திருக்கிறாய்'' எனக் கூறி அவ்ரை நிர்வாணமாக்கி போலீசார் லட்டியால் வயிறு, முதுகு, கால் முட்டிகள் உள்பட உடல் முழுவதிலும் அடித்திருக்கின்றனர். அடிவயிற்றிலும், நெஞ்சிலும், பூட்ஸ்காலால் உதைத்ததோடு அவரை பட்டினியும் போட்டுள்ளனர். இதனால் அவர் உடல்நிலை மோசமாகி பேச முடியாமல் இருந்த போதும், பேசும்படி கட்டாயப்படுத்தி மேலும், மேலும் அடித்ததில் அவர் சுயநினைவு இழந்துள்ளார். இருந்தாலும், அவர் நடிப்பதாகக் கூறி போலீசார் கூராக சீவப்பட்ட மரக்கட்டையை வாயிற்குள் அடித்து நுழைத்ததில் இரத்தம் வழிந்தது.

அதன்பிறகு தீப்பந்தத்தைக் கொண்டு அவர் முகத்திலும் உடல் உறுப்புகள் அனைத்திலும் போலீசார் அடித்திருக்கின்றனர். மேற்படி சித்திரவதைகளின் விளைவாக கிருஷ்ணன் மரணமடைந்துவிட்டார். ஆனால், வீரப்பன் கும்பலைச் சேர்ந்த கண்ணிவெடி வைத்தவர்களை தேவாரம் பிடிக்க முயன்ற போது ஏற்பட்ட மோதலில் மூன்று பேர் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும், அதில் கிருஷ்ணனும் ஒருவர் என்று அவர் சடலத்தை புகைப் படம் போட்டு, மறுநாள் நாளிதழ்களில் செய்தி வெளியாகியிருந்தது. இறந்தவர்களின் உடலை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்காமல் போலீசார் காட்டிலேயே வைத்து எரித்து விட்டனர்.

இன்னும் ஏராளமான சம்பவங்கள் நேரிடையாக ஆய்வு செய்யப்பட்டு இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. ''அடிச்சால்தான் சார் உண்மை வரும்'' என்று போலீசு வன்முறைக்கு சப்பை கட்டுபவர்கள் வீராணம் வழக்கில் கருணாநிதியையும், டான்சி வழக்கில் ஜெயலலிதாவையும் இப்படி அடித்து துவைத்து, உண்மையை வரவழைத்திருக்கலாமே என்று கேட்பதில்லை.

**பெண்கள் சிறுவர்கள் மீதான காவல், சிறைத் துறையின் கொடுஞ் செயல்கள், சாதிய வன்முறை, சிறுபான்மையினர், அகதிகள் மீதான மனித உரிமை மீறல்கள் என மொத்தம் பன்னிரண்டு தலைப்புகளில் போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் மனித உரிமை மீறல்களை ஆதாரங்களுடன் தொகுத்தளிக்கிறது இந்த நூல்.**

ஆம், போலீசு என்ற அமைப்பு ஆளும் வர்க்க, அரசியல் ஊழல் பேர்வழிகளை தவறு செய்தாலும் பாதுகாக்கும். தவறே செய்யாவிட்டாலும் அப்பாவி உழைக்கும் மக்களின் மீது பாய்ந்து அவர்களின் ஆடு கோழிகளை மட்டுமல்ல அவர்களையும் கொன்று பசியாறும், ஒரு கொடூரமான சட்டப்பூர்வ கிரிமினல் கும்பல்களை கொண்ட அமைப்பு என்பதே உண்மை. இந்த நூலில் இடம் பெற்றுள்ள புள்ளி விவரங்களே இந்த அமைப்பை கலைத்துவிட வேண்டும், ஒழித்து விட வேண்டும் என்ற உணர்வினை எழுப்புகிறது.

எனினும் இந்த உண்மைகளை முயற்சி எடுத்து மக்களின் பார்வைக்கு நூலாக தொகுத்து முன் வைத்துள்ள தொண்டு நிறுவனமோ போலீசு என்ற இந்த குற்றக் கும்பல்களுக்குள்ளேயே சீர்திருத்தம் கொண்டு வரமுடியும் என திருடர்களின் கைகளிலேயே பூட்டு தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைக்கச் சொல்கிறது. மனித உரிமைகள் பற்றிய போதனை, மென்மையாக அணுகுவது பற்றிய பயிற்சி என்ற அதிகார வர்க்கத்தின் மாயாவாதத்தின் தொடர்ச்சியாகவே இருக்கிறது இந்தப் பரிந்துரை.

போலீசைக் கலைப்பதும், புரட்சியும் தான் நமது பரிந்துரை. பாதிக்கப்பட்டவர்கள் யாருக்கும் இந்தப் பரிந்துரையை ஏற்பதில் தயக்கமிருக்காது. இந்நூலைப் படிப்பவர்களுக்கும் கூடத்தான்.

- துரை. சண்முகம்.

நூல் வெளியீடு
மக்கள் கண்காணிப்பகம் - தமிழ்நாடு
7, பி.டி. ராசன் சாலை,
2-வது தெரு, மதுரை - 2.

நூல் கிடைக்குமிடம்:
கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 2.

நூலின் விலை: ரூ. 75.00, பக்கம்: 340, ரூபாய் பத்து சேர்த்து M.O. செய்தால் அஞ்சலில் பெறலாம்.

**''நீ வீரப்பனின் வைப்பாட்டி தானே!'' எனச் சொன்னதோடு, அசிங்கமான வார்த்தைகளால் கேவலமாக திட்டி கேலி பேசியிருக்கின்றனர். அவரது மார்பை கிள்ளியும், சீண்டியும் தரக் குறைவாக பேசினர். அவர் மலங்கழிக்கச் செல்லும் போதும் கூட ஒரு போலீசுகாரர் முன்னால் நின்று கொண்டு அவரது பிறப்புறுப்பைப் பார்த்துக் கொண்டே அசிங்கமாக கேலி செய்து பேசியுள்ளார்.**

www.padippakam.com



# பணி'விடை'

‘‘எல்லாம் மக்கமனுசாளாண்ட போயி தண்ணிய தளுப்ப குடிச்சி எளப் பாறி எழுந்து வர்றாங்க. எனுக்குன்னு இன்னா கடக்குது இந்த ஊர் ஒலகத்துல, அக்காளா தங்கச்சியா, அண்ணனா தம்பியா...''

இழுத்து பெருமூச்சுவிட்டவள் அடக்கி மெதுவாய் ரகசியம் சொல்வது போல்

''யெம் பெரிய புள்ளையானாண் டதான் போய் பத்துநாள் கண்ணுக்கும றவா கெடந்துட்டு வரணும், முக்கியமா உம் பல்லுல நிக்காம...'' என்றான் வெள்ளச்சி.

''இந்த காது - மூக்கோட போனி யனா உம் புள்ள படிக்கிற காலேசி கேட்டு கிட்டகூட சேக்கமாட்டான் வாச்சிமேன். போடி போக்கத்தவள, போவப்போறாளாம் புள்ளையாண்ட. வெத்தல குடுத்திய பொயல (புகை யிலை) எவடி குடுப்பா அதுக்குள்ள மறந்துட்டா பார்'' என்றான் மீசைக் காரன்.

''ம்ஹூம் உம் புட்டுக்கூடை தலைக்கும், ஃபுல்கை சட்டைக்கும் உன்னெ உள்ள வுடுரவன் என்னெத் தானா எட்டப்போடின்னு தள்ளிடப் போறான். இந்த எச்சப்பொட்டி எங்கப் போச்சின்னு தெரியல'' என இருட்டில் முனகியபடி தடவிய வெள்ளச்சியின் தொணதொணப்பில் விழித்துக் கொண்டான் சௌந்தர்.

''வெடியாங்காட்டியும் ஆரம்பிச்சிட் டிங்களா புராணத்த'' மெல்ல சிணுங்கலாய் சிரித்து ''யேம்மா! நான் இன்னா அங்க சம்பள வேலையா பாக்குறேன். எம்பாடே ஹாஸ்டல் கெடைக்காம, வெளியில தங்கி ஓட்டல்ல சாப்பிட்டு... செலவு போதும் போதும்னு ஆவுது.

உங்களையெல்லாம் கூட்டிம்போய் வச்சு காப்பாத்தாம இருக்கவா இவ்ளோ கஷ்டப்பட்டி ராத்திரி பகலனு கண்முழிச்சி படிக்கறது. நீங்கவொண்ணா பாத்துக் குனே இருங்க எப்படி வச்சி காப்பாத்தப் போறேன் உங்களன்னு...'' அதை வாய் சொல்லால் விவரிக்க முடியாது என்பது துபோல் நிறுத்தினான் சௌந்தர். சொல்லி யது போலவே -

- கல்லூரி முடித்த ஒரு சில வருடங்க ளுக்குள் சௌந்தர் ஒரு நல்ல அரசு வேலை கிடைத்து பெங்களூர் சென்றான்.

பெரும்பொங்கலுக்கு ஊருக்கு வந்தவன் கன்னுப் பொங்கல் அன்று அம்மா வைத்த கறிக்குழம்பை ஆசை, ஆசையாய் பிசைந்து வாயில் வைக்கும் போது

''போடி உம்புள்ளையோட. இந்த கழுநீர்த் தண்ணிய நான் கொதிக்க வச்சி குடிக்கமாட்டேனா? இல்லெ தெரியா துன்ற நெனப்பா! உப்பு இருந்தா மொளகா யில்ல, மொளகா இருந்தா புளியில்ல இன்னாடி கொழம்பு வச்சி காட்டுர கொழம்பு. நாக்கு செத்து நாம் போய் சேந்து டவன் பொழுதோட''

''நல்லாதானப்பா இருக்குது இந்த கொழம்புக்கு இன்னா'' என்ற மகனை என் அதிகாரத்தில் குறுக்கீடு செய்ய உனக் கென்ன உரிமை என்பதுபோல் கேவ லமாய் பார்த்து.

''இவம் பவிசிக்கி ஒரு ஆபீசரா கூட ஆயிட்டான்டா... ஆ... பீசரு. இன்னாமேரி சொரணகெட்ட படிப்பு படிச்சிருந்தா இந்த கயிதமூத்திரம் கமகமன்னு மணக்குதுன் னுவான்... த்தூத், த்தெரி... நீயே கூட்டிம் போயி உன் ஆத்தாள வயனமா (நல்லா) வடிச்சிக்கொட்டச் சொல்லி துண்ணு...''

பேசிக்கொண்டே தட்டில் கையை கழுவிவிட்டு துண்டை உதறித் தோளில் போட்டு பஜனை கோயில் பக்கம் சென்றார் மீசைக்காரர் கோப மாக:

''இந்த துச்சாதனன் சப்பைல என்னெ நிர்க்கெதியா தவிக்க வுட்டுட்டு போயிட்டியே, ஓ! என்னெ பெத்த அம்மா''

ஆற்றாமை ஒப்பாரியாய் நீண்டது வெள்ளச்சிக்கு. அடுக்கு பானைகளில் சுருட்டி வைத்திருந்த துணிமணிகளை கார்ப்பாச்சி பையில் திணித்துக் கொண்டே

''நாம் போறன் எம்புள்ளையோட, இனி இந்த சீமைக்கு வருவேன்னு பாக்காதடா பாவி... தெனம் நாக்கு ருசியா ஆக்க, எங்கப் போவேன். நெனச்சி நெனச்சி வெக்கி சாவ மாட்டே...

சௌந்தரு, நான் வந்துடரேன் எப்பா, உன்னோட. நீ கூட எனுக்கு கஞ்சி ஊத்த வாணாம். நாலு வூடு சட்டி பானை கழுவி என் வவுத்த காப்பாத் திக்குவேன்... ஆண்டவன் குடுத்த கையுங் காலுங் கீது...''

இப்படியே பெனாத்திக் கொண்டு வெள்ளச்சி படுக்கும்போது இரண்டாம் ஆட்டம் சினிமாப் படம் விட்டுவிட்டார்கள்.

நடந்ததொன்றும் பெரிய சங்கதி கிடை யாது. இதை விட கொடூரமாக வெள்ளச்சி யை அடித்து பிணமாககூட கிடத்தி யுள்ளான். பாளை கத்தியை தூக்கிக் கொண்டு சந்து சந்தாக துரத்தியிருக்கிறான் மீசைக்காரன். அதையெல்லாம் ஒப்பிட இந்த சண்டை சர்வசாதாரணம்தான் என்றாலும் இந்த சாக்கிலாவது தன் மக னுடன் சென்று விட வேண்டும் என்ற ஆவல் மிகுந்திருந்தது வெள்ளச்சிக்கு.

சௌந்தர் ஊருக்கு கிளம்பின விடியற் காலையில், உன்னுடன் வந்தே தீருவேன் என்று பஸ் ஸ்டேண்டு வரை மல்லுகட்டிய அம்மாவிடம்.

''யெம்மா!.. இன்னைக்கு நேத்தா பாக்குற அந்தாளு கூத்தெ, அவரை வுட்டுட்டு நீ என்னோட வந்துட்டா, வேளா வேளைக்கு மொறையா கஞ்சி காய்ச்சி வாக்குறவங்க யாரு? இன்னாத்தான் அவரு உன்னை கேயிமேல கேயி (திட்டி னாலும்) கேட்டாலும் உன் கை தவிர எந்த அண்ணந்தம்பி வூட்ல கை நனச்சி இருக் காரு இந்த நாள் வரைக்கும்''

சௌந்தரின் நினைவு பெங்களூர் நோக் கிச் சென்றது. அப்பா அம்மாவை பெங்

www.padippakam.com

களூருக்கு வரச்சொல்லி எவ்வளவு கூப்பிட்டும் அவர்களை வர மறுப்பதாகவும், அந்த மண்ணை விட்டு ஒரு நாள் பிரிவதற்குக் கூட அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்றும் பக்கத்து ஃபிளாட் கிஷோரிடம் சொல்லி வைத்திருந்தான் சௌந்தர். பிடிவாதம் பிடித்து அம்மா தன்னுடன் வந்து விட்டால்...

நினைக்கும் போதே பகீர் என்றது. எந்நேரமும் வெத்திலை பாக்கை குதப்பிக் கொண்டு கடைவாய் ஒழுக வந்து நின்றால் என்னவென்று அறிமுகப்படுத்துவது?

அம்மாவின் புலம்பல் சௌந்தரின் சிந்தனையை அறுத்து அவனை ஊரில் இறக்கியது.

"நீயே நெனச்சிப்பாரு. உன்னை விட்டா அவருக்கு யாருன்னு. தீவாளிக்கு வரும்போது உங்க ரெண்டு பேரையும் ஒண்ணா கூட்டிம்போறேன். அழுது, அழுது ஒடம்ப கெடுத்துக்காத."

என்று சொல்லி பஸ் ஏறினவன் அப்பன் சாவுக்குத்தான் ஊர் வந்து சேர்ந்தான் - ஆளுயர மாலையோடு.

"ஹூம்.. ஆம்பிடியான வாரிக் குடுத்துட்டு அம்போன்னு நிக்குறா. சோந்தரு (சௌந்தர்)... உங்க ஆத்தாள கூட்டிம்போய் ஒரு பத்துநாள் ஒன் புள்ளைவளோட வச்சிருந்து கூட்டியனுப்புப்பா, காபகம் (நினைவு) மாறட்டும். இல்லன்னா ஒெப்பன் அவளையும் கூடவே கூட்டிக்கினாலும் கூட்டிக்குவான் பாவி மனுசன்..." ஆதங்கப்பட்ட அவுரவம் பெரியம்மாவிடம்

"நானும் அப்பிடித்தான் நெனச்சேன் பெரீம்மா... ஆனா, நேத்துதான் டெல்லி போவனும்னு மேலிடத்து ஆடர் வந்திடிச்சி. என் வூட்டுக்காரியையும் புள்ளைங்களையும் பெங்களூர்லயேதான் விட்டுட்டு போவனும். பசங்களை ஸ்கூலுக்கு அனுப்ப, வீட்டு வேலைகளை பாக்க, அவ வேலைக்கு போகன்னு ஒண்டி கட்டையா கஷ்டப்படுவா. இவங்கள எங்க கவனிக்க முடியும்.

இவுங்களுக்கும் முடியாத வயது. நான் ஊரில் இருந்தாலாவது பரவாயில்ல" எதை சொல்லி முடிப்பது என தயங்கியவன்

"கண்டிப்பா நான் திரும்ப வந்ததும் கூட்டிம்போறேன். எங்கப்பனுந்தான் இல்ல. இனிமே இன்னா எங்கம்மாவ என்னோட கூட்டிம் போய்டரேன்" என்று சொன்னானே தவிர

இவங்களை கூட்டிம்போனால் இங்கு ஊர்நாட்டில் நம் தம்பி மனைவியை அதிகாரம் செய்வதுபோல் செய்து நம் மனைவி கிழவியை ஏதாவது திருப்பிச் சொல்லி இங்கு ஊரைக் கூட்டுவதுபோல் அங்கு ஒப்பாரி வைத்துவிட்டால் என்ன ஆவது.

ச்சே சொந்தம் பந்தம் என்ற பேரில் இவர்கள் எல்லோரும் ஏன்தான் இப்படி நச்சரிக்கிறார்களோ! மூஞ்சியில் அடித்தாற்போல் சொல்லிவிடலாமா? எல்லோர் வீட்டு பிள்ளைகளையும் போல் ஆத்தா அப்பனுக்கு சோறு போடாமல், வண்டை வண்டையாய் திட்டி உதைத்து கொடுமை படுத்துகிறோமா? மாதாமாதம் போதும் போதும் என்கிற அளவுக்கு பணம் அனுப்புகிறோம், வருசம் நாலு புடவை, மூணு மாசத்துக்கு ஒருமுறை போய் பார்த்து விட்டு வருகிறோம். இதைவிட வேறென்ன தேவை, குறை என்ன வைத்தோம்.. பலவாறு சிந்தித்துக் கொண்டு சென்றான்.

கணவன் இறந்ததை கூட மறந்து விடலாம் போலிருந்தது. ஆனால் மகன் இந்த முறையும் பெங்களூர் கூட்டிச் செல்லாமல் விட்டு ஞாபகம் வெள்ளச்சியை புரட்டியெடுத்துக் கொண்டிருந்தது.

வரும் பயணம் எப்படியும் போயே தீர்வது என்ற தீர்க்கமான முடிவுடன்

மதுராச்சாரியிடம், மீசைக்காரரின் பழைய கடுக்கன் தன்னோட தாலி நான குழைகளை கொடுத்து அழித்து தொங்கட்டானும் எட்டுக்கல் மூக்குத்தியும் செய்யச் சொன்னாள்.

பக்கத்துவீட்டு கிஷ்டம்மா மகளை வியாழக்கிழமை சந்தைக்கு கூட்டிச் சென்று ரவிக்கை துணியும், காக்கா சருகு (பார்டர்) பாடர் கட்டின ஒசத்தி புடவையும் வாங்கி வந்து வைத்தாள்.

கழனி காட்டு பக்கம் போவதுகூட கடந்த சில நாட்களாக குறைந்துவிட்டது வெள்ளச்சிக்கு. வினாயர். சத்திக்கும் சௌந்தர் வராததால் சின்ன மகனிடம்.

"அண்ணனுக்கு கடுதாசி போடுடா மாரிய (மார்கழி) மாசம் அப்பனுக்கு தல தெவசம் (திதி) வருது. வராம கொள்ளாம விட்டுட போறான்" என்று நச்சரித்து கடிதம் எழுத வைத்து தபாலாபீசுக்கு சென்று போஸ்ட்மேனிடம் கொடுத்து

"நெனப்பா கொண்டும்போய் குடுத்துட சொல்லுப்பா எம் புள்ளையாண்ட" என்று வெகுளித்தனமாய் கூறிவிட்டு வந்தாள்.

●●●

"யெம்மா! இந்த மார்கழி மாச குளுர் உனக்கு ஒத்துக்காது சித்திரை மாசம் வரும் போது அழைச்சிட்டு போறேன்."

இப்படியே விட்டால் தன்னை இவன் கடைசிவரை கூட்டிம்போகவே மாட்டான் என்றும், எப்படியும் அவனுடன் போய் அந்த சீமையை பார்த்துவிட்டு வந்துவிட வேண்டும் என்ற கண்டிப்பான முடிவோடு

வயது ஏறி தளர்ந்து போய் இருந்தாலும் வெள்ளச்சி விடாப்பிடியாக இருந்தாள்.

"அவருதான் வரும் பயணம் கூட்டிட்டு போறேன்னு சொல்ராரே, இந்த கெய்வி கேக்குதா பாரு. இரு தே! ஊர்ல வேற சாவாய்டிச்சி. காக்காவூட்டு பெரிய வரு செத்துட்டாராம்...

சாவு மோளசத்தத்த கேட்டுட்டு ஊர் பயணம் போவக்கூடாது" சின்ன மரும வளும், கிஷ்டம்மா மகளும் சொன்னார்கள். யாரும் எதை சொல்லியும் கேட்பதாக இல்லை, ஏதோ இவர்கள் எல்லாருமே சேர்ந்து தன்னை போகவிடாமல் சதி செய்வதாய் பட்டது வெள்ளச்சிக்கு.

தன் துணிமணிகளை ஒயர்பேக்கில் திணித்து இடுப்பில் வைத்துக் கொண்டு எல்லோருக்கும் முன்னால் முன்கொசுவும் பின் கொசுவம் ஆட சரசரவென்று நடந்தாள் வெளச்சி இலுப்பை மர ஸ்டாப்பிங்கை நோக்கி.

அம்மா நடந்து செல்வதை பார்க்கவே அறுகளிப்பாய் இருந்தது சௌந்தருக்கு ஏனோ உள்ளுக்குள் கொதித்தது. முகத்தில் எள்ளு போட்டால் எள்ளு பொறியும் வெளிக் காட்டாமல் இருக்க எவ்வளவோ முயன்றான். முடியவில்லை.

முன்பெல்லாம் ஊருக்கு வந்தால் அம்மா பக்கத்தில உட்கார்ந்து கொண்டு பொழுதானா மூஞ்சிக்கு சோப்பு போட்டு கழுவிட்டு லைட்டா பவுடர் போடும்மா ஜாக்கெட் போட்டுக்குனு பஸ் ஸ்டாண்டு போ! நேத்து உனக்காகத்தான் இந்த செருப்பு வாங்கியாந்தேன். வெளியே போனால் போட்டுட்டு போ!

தலையை சீவி வாராம இன்னாவே கோடாலி கொண்டை போடறியே. குப்பக்காடு, குப்பக்காடு... என்றெல்லாம் கேலி செய்வான்.

இன்றைக்கு தான் சொன்னபடியெல்லாம் அச்சுபிசகாமல் செய்து கொண்டு தனக்கு முன்னால் போகும் அம்மாவைப் பார்த்து வெறுப்பும் ஆத்திரமும் வந்தது சவுந்தருக்கு. இந்த வயசுல தேவை தானா இந்த கிழவிக்கு... சனியன் என்று வாய்விட்டுச் சொல்லியவாறு பல்லை கடித்தான் சௌந்தர்.

● நிதி. கோமேதக

www.padippakam.com

# உங்களிடம் பேச என்ன இருக்கிறது?

''உழுபவனுருக்கே நிலம் சொந்தம்''
இது செங்கொடி இயக்கத்தின் முழக்கம்.
''காலில் விழுபவனுக்கே
தொகுதி சொந்தம்''
இது ஜெயலலிதாவின் பழக்கம்.

முழக்கத்திற்காகப்
பழக்கத்தை விட முடியுமா? என்று
வழக்கம் போல்
பேசுகிறார்கள்
இடது, வலது, தலைவர்கள்.

தொண்டர்களே,
உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா?
சாமர்த்தியமாகப் பேசும்
உங்கள் வாய்களில்
சசிகலா பண்ணைகளின் சாணிப்பால்

சாணிப்பாலே சம்மதம் எனில்
**உங்களிடம் பேச என்ன இருக்கிறது?**

பண்ணைகளின்
ஆதிக்கத்திற்கெதிராகத் தூக்கிய
அரிவாளும், சுத்தியலும்
கடைசியில் -
போயசு தோட்டத்தில்
புல்லறுக்கத்தான் என்றால்,

தோழர்களே இனி உங்களிடம்
பேச என்ன இருக்கிறது?

தேசிய அளவில் தேர்தல் சின்னத்தை
பயன்படுத்த தடையா?
தவித்துப் போகும் காம்ரேடுகளே

உலக அளவில் தியாகிகளின் ரத்தத்தால்
திமிறி எழுந்த சின்னத்தை
புரட்சித் தலைவியின்
ஆசிபெற்ற சின்னம் என்று
சுவரில் கிறுக்கும் நீங்கள்
செங்கொடியையும்
பயன்படுத்தக் கூடாது என்று நாங்கள்
ஏன் தடை செய்யக் கூடாது?

பால் திரியப் பார்த்ததுண்டு
இரத்தத்திலும் திரிபு காணும்
ராஜதந்திரி நீங்களென்றால்,
இனி பேச என்ன இருக்கிறது?

ஆயிரம் பகத்சிங்குகளாய்க்
கிளர்ச்சி ஊர்வலம்
நடத்த வேண்டிய தருணத்தில்
ஆயிரம் காந்தி
அமைதி ஊர்வலம் நடத்தும்
கங்காணிகளே

ஆளும் வர்க்கங்களின் அரசியல்
சந்தையில்
புரட்சியை விலை பேசும்
கமிசன் மண்டிகளான உங்களுக்கு
கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை எதற்கு?



தயவு செய்து உங்கள்
விலைப் பட்டியலை வெளியிடுங்கள்.

கேட்டுப் பாருங்கள் கீழ்த் தஞ்சையில்
அந்த நடவுப் பாடல்களில்
இன்னும் தியாகிகளின் இரத்தம்
தீர்ந்து விடவில்லை.
பயிர்களுக்கு பச்சையும்
விவசாயிகளுக்கும் சிகப்பும் இல்லாமல்
வாழ முடியாது என்பதை மக்களுக்கு
சொந்த அனுபவத்தில் புரிய வைத்தது
அன்றைய அறுவடை இயக்கம்

கூட்டணி போட்டுக்
கொள்முதல் இயக்கம் நடத்தும்
இடது வலதுகளே
ஆம்பலாம்பட்டு ஆறுமுகமும்
வாட்டாக்குடி இரணியனும்
எதிரிகளின் துப்பாக்கியால்
துளைக்கப்பட்ட போது
''செங்கொடி இயக்கம் வாழ்க!''
என முஷ்டி உயர்த்திய வரலாறு
ஜெயலலிதாவிடம் இரண்டு
சீட்டு கேட்கத்தான் என்றால்
உங்களிடம் பேச என்ன இருக்கிறது?

சிறையில் எதிரிகளால்
விஷச் சோறு கொடுத்து கொல்லப்பட்ட
களப்பால் குப்புவின்
கடைசி ஆசை
மூப்பனார், ஜெயலலிதாவுடன் சேர்த்து
கூட்டாஞ்சோறு தின்னத்தான் என்றாலும்
உங்களிடம் பேச என்ன இருக்கிறது?

சீனிவாசராவின் தலைக்கு
எதிரிகள் விலை வைத்தபோது
தயக்கமில்லாமல் மக்கள்
விதைநெல்லைப் போல கட்சியையும்
சேர்த்துக் காப்பாற்றினார்கள்

இன்றோ
நல்லக்கண்ணுவும், சங்கரய்யாவும்
தங்களை கூவிக் கூவி விற்கிறார்கள்.
எதிரிகளுக்கோ
இனாமாக கூட ஏற்றுக் கொள்ள தயக்கம்!

புரட்சிக்கும் வேலைக்காக
முன் வைத்த காலைபின் வைக்கும்
ஒரு நினைப்பு வந்ததற்காகவே
''உனக்கு வெட்கமாயில்லை?'' என
தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள்
கார்க்கியின் தாய்.

தாயை படித்தால் தகராறு என்பதால்
'எனக்கு பிடித்தது கம்பராமாயணம்'
என மறைந்திருந்து கட்சியைக் கொல்லும்
மகா உத்தியில்
மயங்குகிறார் நல்லக் கண்ணு.

சங்கரய்யாவுக்கோ
கதை படிக்க தாய்
கடைப்பிடிக்க - 'அம்மா'

மாயூரம் சதி வழக்கும்
நெடும்பலம் வழக்கும்
அசல் கம்யூனிஸ்டுகளை
அடையாளம் காட்டியது
டான்சி வழக்கோ
போலிகளை
அடையாளம் காட்டிவிட்டது.

மகாமகக் கொலைகாரி
மசூதி இடிப்பு கைகாரியை வைத்து
மதவாதத்தை முறியடிக்கலாம் என்றால்

இனி உங்களிடம் பேச
ஒன்று மட்டுமே இருக்கிறது

ஜமீன்தாரிகளும்
இனாம்தாரிகளும்
உங்கள் கட்சிக்குள்ளேயே இருப்பதை
இனியும் மறைத்தால்

இனி உங்களுக்குள்
நீங்களே பேச முடியாது!

● **துரை. சண்முகம்**


படிப்பகம்

www.padippakam.com

# சாராய விற்பனை ஜனநாயக உரிமையா?

## தர்மபுரியில் ஒரு தேர்தல்!

அன்பிற்குரியவர்களே!

ஏன் இந்தத் தேர்தல், எதற்காக இந்த தேர்தல்? இந்த பஞ்சாயத்தின் அனைத்து தரப்பு மக்கள் நலனை கருதி இந்த தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

மக்களுக்கு இந்தக் கள்ளச்சாராயக் கடைகள் வேண்டுமா? இல்லை வேண்டாமா? என்பதைத் தீர்மானித்து முடிவு செய்வதற்குத்தான் இந்த தேர்தல்.

''இந்த கள்ளச்சாராய கடைகளால் மக்களுக்கு ஏராளமான பாதிப்பு. அன்றாடம் பேருந்தில் பயணம் செய்யக் கூட முடியவில்லை. சாராயம் குடித்துவிட்டு பஸ்ஸில் தள்ளாடி ஏறிக் கொண்டு வருவதாலும், தகாத வார்த்தைகளை உளறிக் கொள்வதாலும் பயணிகளுக்குள் சச்சரவு ஏற்படுகிறது. சிலர் சாராயம் குடிப்பதால் குடல் வெந்து பாதிக்கப்படுகிறார்கள். இந்தச் சாராயக் கடையை ஒழிக்க நீங்களாவது முயற்சி செய்யக் கூடாதா?'' என்று நமது பஞ்சாயத்தைச் சேர்ந்த பலர் விவசாயிகள் விடுதலை முன்னணியினரிடம் புகார் செய்துள்ளனர்.

மக்களின் இந்தக் கோரிக்கையை பரிசீலித்தோம். இது சம்மந்தமாக போலீசிடம் கேட்டோம். அதற்கு அவர்கள் ''நாங்கள் என்ன தோழர் செய்ய முடியும்? மக்களே எங்களிடம் வந்து சாராயக்கடைகள் கொடுங்கள் காய்ச்சி விற்கிறோம் என்று நச்சரிக்கிறார்கள். அப்படி மீறிக் கைது செய்து கொண்டு வந்தாலும் ஏதாவது கட்சி பிரமுகர்கள் வந்து இவர்கள் எங்கள் ஆட்கள் விட்டுவிடுங்கள் என்று கோரி விடுவித்துக் கொண்டு சென்று விடுகின்றனர். இப்படி இருக்கும்போது நாங்கள் எப்படி சாராயத்தை ஒழிக்க முடியும்?'' என்று திருப்பிக் கேட்கிறார்கள்.

சாராயம் விற்பவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை மக்கள் சிலரிடம் விசாரித்தோம். அதற்கு அவர்கள், குறிப்பாக சின்னபொண்ணு, சின்னபாப்பா போன்றவர்கள் தாங்கள் விதவைகள் என்றும் ரஜினி போன்றவர்கள் தாங்கள் ஊனமுற்றவர்கள் என்றும் வேறு என்ன தொழில் தங்களால் செய்ய முடியும் என்றும், வாதிடுவதாக கேள்விப்பட்டோம்.

அடுத்து கிட்டநாடார், அவிமன்னன் போன்ற நண்பர்கள் ''எங்கள் உடல் நிலையைப் பாருங்கள். எங்களால் உடம்பு வளைந்து விவசாய வேலைகள் செய்ய முடியுமா? வேறு வழியில்லை. ஆகையால் சாராயம் விற்கிறோம்'' என்று கூட சொல்லலாம். ''அவிமன்னன் போல நானும் ஒரு மாடி கட்ட வேண்டாமா? இப்பத்தான் பேஸ்மட்டம் போட்டிருக்கிறேன். அதற்காக நான் சாராயம் விற்றுத்தான் ஆகவேண்டும்'' என்று வெள்ளையன் போன்றவர்கள் கூறலாம்.

இப்படிப்பட்ட இவர்களின் வாதத்தை விவசாயிகள் விடுதலை முன்னணி ஏற்கவில்லை. ஏன் எனில் சிலர் சாராயம் காய்ச்ச விரும்பினாலும், அரசியல் கட்சி பிரமுகர்கள் நிர்பந்தித்தாலும் உறுதியாக இருந்து சட்டத்தை அமல்படுத்துவது பாலீசி கடமையல்லவா?

சின்னப்பாப்பா, சின்னப் பொண்ணு, ரஜினி போன்ற நண்பர்கள் தம்மால் உழைக்க முடியாது என்றும் தமக்கு வேறு வழியில்லை என்றும் கூறினால் இவர்கள் கூறுவது உண்மைதானா என்று அறிய ஒரு சின்ன கமிசன் போட்டு ஆய்வு செய்ய வேண்டும். உண்மை என்று அறியப்பட்டால் அவர்களின் மறு வாழ்விற்கு அரசாங்கம் உதவிச் செய்யலாம். அதற்காக விவசாயிகள் விடுதலை முன்னணியும், மக்களும் கூட போராடலாம்.

அதை விட்டு விட்டு சிலர் பணக்காரர்கள் ஆவதற்காக பலநூறு குடும்பத்தின் தாலிகள் அறுபடுவதை நாம் ஏற்கமுடியாது. இது விவசாயிகள் விடுதலை முன்னணியின் கருத்து. ஆனால் மக்களின் கருத்து என்ன என்பதை அறியத்தான் இந்த தேர்தல்.

பெரும்பான்மை மக்கள் சாராயக் கடைகள் வேண்டுமென்று கருதினால் மக்கள் தவறான கருத்தில் உள்ளார்கள் என்று அர்த்தம். அவர்கள் தங்களின் கருத்தைத் தவறு என்று புரிந்து மாற்றிக் கொள்ளும்வரை சாராயம் விற்பதை அனுமதிப்பதுதான் சரி. அதற்காக சாராயம் விற்பவர்களை போலீசு தொந்தரவிலிருந்து மீட்டு பாதுகாப்புக் கொடுக்கவும், முறைப்படுத்தவும் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட கணகாணிப்பாளருக்கும், மாவட்ட முதன்மை நீதிபதிக்கும் இத்தேர்தல் முடிவை அனுப்புவது;

இல்லை சாராயக்கடை வேண்டாமென்று பெரும்பான்மை மக்கள் கருதி முடிவு செய்தாலும் அந்த முடிவை மேற்கண்ட அதிகாரிகளுக்கு அனுப்பி நடைமுறைப்படுத்த வேண்டிக் கொள்வது.

அப்படி அதிகாரிகள் பெரும்பான்மை மக்களின் கருத்தை நடைமுறைப்படுத்த மறுத்தாலோ, சாக்குப் போக்குகள் காட்டி இழுத்தடித்தாலோ தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டி மக்களே களத்தில் இறங்கி நேரடி நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, வரும் தேர்தலில் அனைத்து தரப்பு மக்களும் வாக்களியுங்கள்.

1. இது தீவிரமான விவசாயக்காலம் என்பதால் தனியாக வாக்குச் சாவடிகள் அமைத்து விவசாயிகளை அழைத்துவந்து ஓட்டு போட வைப்பது, விவசாய உற்பத்தியை பாதிக்கும். எனவே, விவசாயிகள் விடுதலை முன்னணி தலைமையில் கிராமம், கிராமமாகவும் வீடு, வீடாகவும் வந்து உங்களின் வாக்குகளை வாங்கிக் கொள்கிறோம்.

2. இந்த் தேர்தல் சிறப்பாக நடக்கவும், அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காமல் இருக்கவும் - சட்ட ஒழுங்கைப் பாதுகாக்கவும் - மாவட்ட காவல் துறையானது

**சாராயத்தை நீங்களாவது ஒழிக்கக் கூடாதா என்று வி.வி.மு.விடம் பலர் புகார் செய்தனர். இது பற்றி போலீசிடம் கேட்டோம். ''நாங்கள் என்ன தோழர் செய்வது? மக்களே சாராயம் காய்ச்சி விற்கிறோம் என்று எங்களிடம் நச்சரிக்கிறார்கள்'' என்றனர். சாராயம் விற்பவர்களோ எங்களால் உடம்பு வளைந்து விவசாய வேலை செய்ய முடியாது. வேறுவழியில்லை என்பதால் விற்கிறோம் என்கிறார்கள். தேர்தல் நடத்தி மக்கள் கருத்தை அறிவதைத் தவிர வேறு வழியில்லை.**

www.padippakam.com

25-ஆம் தேதி அதிகாலையில் நான்கு காவலர்களை அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். மேலும் கிராம வருவாய்துறை அதிகாரிகள், ஊழியர்கள் (RI, VAO மற்றும் சிப்பந்திகள்) பஞ்சாயத்து தலைவர், உபதலைவர், வார்டு உறுப்பினர்கள் அனைவரும் கண்டிப்பாக கலந்துக் கொள்ள வேண்டுமென்று மிகவும் கேட்டுக் கொள்கிறோம்.

3. மாவட்ட உயர்திரு. முதன்மை நீதிபதி அவர்கள் (PDJ) இந்தத் தேர்தலுக்கு சட்ட ஆலோசனை கொடுப்பது சரியென்று கருதுவார்களேயானால் அதற்காக சட்ட வல்லுனர்களை தேர்தல் நடக்கும் இரண்டு நாட்களுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

4. தேர்தலை நடத்த உதவுவதற்காக வருகின்ற காவல் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளின் இரண்டு நாள் செலவுகள் - தேனீர், காலைச் சிற்றுண்டி மதிய உணவு, இரவுச் சாப்பாடு, போக்குவரத்து கட்டணம், தங்குமிடம் ஆகிய அனைத்தையும் நாங்கள் ஏற்று ஏற்பாடு செய்கிறோம்.

5. ஒருவேளை அதிகாரிகள் காரிலோ, ஜீப்பிலோ வந்தாலோ, மட்டன் வகைகளையோ, சீமைச்சாராயம் போன்றவற்றையோ விரும்பினாலோ எங்களால் ஏற்பாடு செய்ய முடியாது. மேலும் இந்த பஞ்சாயத்தில் வறட்சி என்பதாலும், நீண்ட நாள் மழை பெய்யாமல் விவசாயம் பாதித்துவிட்டதாலும் மிகுந்த பொருளாதார நெருக்கடி உள்ளது. எனவே பெட்ரோல் செலவையும் ஈடுகட்ட முடியாத நிலையில் உள்ளோம்.

6. இந்த பஞ்சாயத்திலும் தி.மு.க., அ.தி.மு.க., சி.பி.ஐ. போன்ற அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இந்தத் தேர்தல் சிறப்பாக நடக்க வேண்டுமென்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள் கட்சிக்கு இரண்டு பேர் வீதம் வந்து தேர்தல் நடத்தும் குழுவில் கலந்துக் கொண்டு தேர்தலுக்கு உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

7. இன்று நாம் ஒரு அரசாங்கமாக் இல்லை என்பதால் அரசு கஜானாவிலிருந்து இந்தத் தேர்தலுக்கான செலவை பெற்றுக் கொள்ள வாய்ப்பில்லை. எனவே இத் தேர்தல் செலவை ஈடுகட்ட நல்ல உள்ளம் படைத்த மக்கள் உங்களால் முடிந்த நிதியை கொடுத்து தேர்தல் நடத்த உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

8. காவல் துறையினரோ, வருவாய்த் துறை அதிகாரிகளோ, பஞ்சாயத்து தலைவரோ ஏதாவது காரணங்கள், சாக்குபோக்குகள் கூறி வராமல் இருந்தால் அவர்கள் ஒருதலைப்பட்சமாக கள்ளச்சாராயத்திற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று முடிவுக்கு வருவதை தவிர வேறு வழியில்லை.

அப்படி வரத் தவறினால் மக்களைத் திரட்டி காவல் நிலையத்தின் முன்பும், RI, VAO மற்றும் பஞ்சாயத்து தலைவர் வீடுகளின் முன்பும் போராட்டம் நடத்துவதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை என்பதை மிகமிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

9. இப்படி ஒரு தேர்தல் நடத்துவது தவறு, சட்டப்படி செல்லாது என்று யாரேனும் கருதுவார்களேயானால் அது இந்திய அரசியல் சட்டத்தின் எந்த சரத்தின், எந்த பிரிவின்படி செல்லாது என்பதை கூறுவதுடன் அவர்களின் வாதத்தை முன்வைக்க தேவையான சட்ட வல்லுனர்களுடன் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.



# கள்ளச் சாராயத் தொழிலுக்கு போலீஸ் அதிகாரிகள் உடந்தை

## அமைச்சர் புகார்

தூத்துக்குடி, நவ. 28—

தூத்துக்குடி மாவட்டத்தின் சில பகுதிகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோருக்கு காவல்துறையின் கீழ்நிலையில் சில அதிகாரிகளே உடந்தையாக இருக்கின்றனர் என தமிழக மீனளத்துறை அமைச்சர் எஸ். ஜெனிபர் சந்திரன் குற்றம் சாட்டினார்.

ஆனால், சாராயத் தொழிலை கைவிட்டவர்களை மீண்டும் தொழில் செய்ய சில கீழ்நி[illegible] போலீஸ் அதிகாரிகள் [illegible] றுத்தி வருகின்றனர். [illegible]

சாராயத் தொழில் அல்லது வேறு ஏதேனும் குற்றங்களில் ஈடுபடுவோர் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவித்தால், தகவல் தெரிவித்தவர்களின் விவரங்களை ரகசியமாக வைத்[illegible] [illegible] போ[illegible]

[illegible] காரிகள் கூறுகின்றனர்.

ஆனால் இங்கே தகவல் தெரிவித்தவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்டவர்களிடம் போலீஸாரே தெரிவித்து விடுகின்றனர். இதனால் தகவல் தெரிவித்தவர் அச்சுறுத்தலுக்கு ஆளாகிறார்.

[illegible]

தினமணி

புதன்கிழமை 29-11-2000

அதுபோல் இந்தத் தேர்தல் எப்படி சரியானது என்ற வாதத்தை நாங்களும் முன்வைக்க எங்கள் தரப்பு சட்டத்துறையினரையும் அழைத்து வருகிறோம். இதற்காக 10 நாட்களுக்கு முன்பாக தகவல் கொடுத்தால் தான் அழைத்துவர வசதியாக இருக்கும். வரும் சட்டத்துறையினர் செலவுகளுக்கு அழைத்து வருபவர்களே பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. தேர்தல் தினங்களில் யாராவது அசம்பாவிதங்கள் ஏற்படுத்தினாலோ, கலாட்டா செய்து தேர்தலுக்கு இடைஞ்சல் செய்தாலோ, அவர்களை மக்களும் காவல் துறையினரும் கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**குறிப்பு:** ஒரு சில நண்பர்கள் நம் பஞ்சாயத்தில் சாராயக் கடைகள் வேண்டாம். கள்ளுக் கடைகள் மட்டும் நடத்திக் கொள்ளலாமெனக் கருதுகிறார்கள். அப்படிக் கருதுபவர்கள் தங்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை விண்ணப்பமாக எழுதி விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர் முனிராஜிடம் நேரிலோ, கடிதம் மூலமாகவோ கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அப்படி வரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து சாராயக் கடைக்கான தேர்தலுடன், கள்ளுக்கடைக்கான தேர்தலையும் சேர்த்து ஒரே செலவிலேயே நடத்திவிடலாம். இந்தத் தேர்தலுக்கான வரவு செலவுக் கணக்குகளை தேர்தல் முடிந்து ஓரிரு தினங்களில் மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் தெரிவித்து விடுகிறோம்.

அன்புக்குரியவர்களே! சாராயம், கள் குடிப்பதில் சாதி, மதம், இனம், பார்க்காமல் எப்படி ஐக்கியமாக நடத்துக் கொள்கிறீர்களோ அதுபோலவே இந்தத் தேர்தலும் சிறப்பாக நடக்க அனைத்து தரப்பு மக்களும் சாதி, மத பாகுபாடின்றி ஒத்துழைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**இவண்,**

**விவசாயிகள் விடுதலை முன்னணி,**

**கிருஷ்ணகிரி தாலுக்கா,**

நகல்கள்:

1. காவல்துறை, மத்தூர்,
2. உயர்திரு. மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், தருமபுரி,
3. உயர்திரு. மாவட்ட ஆட்சி தலைவர், தருமபுரி,
4. உயர்திரு. மாவட்ட முதன்மை நீதிபதி (PDJ) அவர்கள், கிருஷ்ணகிரி,
5. சாராய வியாபாரிகள் மற்றும் பொது மக்கள்.

**வி.வி.மு. கிருஷ்ணகிரி - வெளியிட்ட துண்டறிக்கை**

www.padippakam.com

# ஜெ.ஜெ. சில குறிப்புகள்

# இதுதாண்டா கைக்கூலிக் கலை

**ஜெயமோகன்** - இன்றைய தலை முறை இலக்கிய வியாதிக்காரர்.

**ஜெயகாந்தன்** - முந்தைய தலை முறை இலக்கிய வியாதிக்காரர்.

பாரதி, கல்கி, புதுமைப்பித்தன் ஆகிய இலக்கியப் பாரம்பரிய உரிமை பாராட்டு பவர் ஜெயகாந்தன். இடதுசாரி இலக்கிய வாதி என்று அறிமுகமாகி, கஞ்சாவிலே தஞ்சம் புகுந்து, ''ஜெயஜெய சங்க்ரா'' வென்று சீரழிந்து போனவர், ஜெயகாந்தன்.

''விஷ்ணுபுரம்'' நாவலின் மூலம் தனது இந்துத்துவ பாசத்தையும் ''பின் தொடரும் நிழலின் குரல்'' நாவலின் மூலம் கம்யூனிச வெறுப்பையும் வெளிப்படுத்திக் கொண்டவர், ஜெயமோகன்.

மரபைப் பேணும் நவீனத்துவ இலக்கி யத்தைப் போற்றுபவர், முந்தைய தலைமு றையைச் சேர்ந்த தந்தையின் விழுமியங் களைச் சுமந்து வாழ்பவர், ஜெயகாந்தன்.

மரபைத் தகர்க்க விளையும் பின் நவீ னத்துவ இலக்கியத்தைப் போற்றுபவர், இன்றைய தலைமுறையைச் சேர்ந்த மகனைப் போல எல்லா விழுமியங்க ளையும் கட்டுடைக்கும் கலகக்காரனாகத் தோன்றுகிறார், ஜெயமோகன்.

''கட்சி சாராத கம்யூனிஸ்டுகள் வகையைச் சேர்ந்தவன் நான். இன்றும் என்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் அடை கிறேன்'' என்கிறார், ஜெயகாந்தன்.

கம்யூனிசம் என்பதையே கட்டோடு வெறுக்கும் ஜெயமோகனோ, கம்யூனிச பாரம்பரிய - அனுபவ உரிமை தனக்கிருப் பதாகக் காட்டிக் கொள்கிறார். இப்படிக் காட்டிக் கொள்வது, கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சார இலக்கியம் படைப்பதற்குத் தேவையான ''சிறப்புத் தகுதி'' என்று ஜெய மோகனுக்கு அவருடைய ஞானத்தந்தை சுந்தர ராமசாமி போதித்திருக்கிறார். ஏனென்றால் சில போலிக் கம்யூனிசப் பிர முகர்களுடன் தனக்கிருந்த ''பரிச்சய''த்தை வைத்தே கம்யூனிச இயக்க அனுபவசாலி போல காட்டிக் கொண்டு இலக்கியம் படைப்பவர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் பிழைப்பு வாதத் தொழிற்சங்கத்தில் சிறிது காலம் இணைந்திருந்தபோது ஒரே அறையில் தங்கி, ஒரே படுக்கையில் புரண்டு, ஒரே தட்டில் உண்டு கம்யூன் வாழ்க்கை வாழ்ந்த தாகச் சொல்லி, தனது கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்துக்கு ஆதார, அனுபவ உரிமை பாராட்டிக் கொள்கிறார், ஜெயமோகன்.

இன்னமும் தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடையும் ஜெயகாந்தனும், கம்யூனிசத்தை வெறுக்கும் ஜெயமோகனும் தலைமுறை இடைவெளியைக் கடந்து ஒரு முனையில் இணைந்திருக்கிறார்கள். பூமிப்பந்தைச் சுற்றி எதிரெதிர் திசையில் பயணம் மேற்கொண்டவர்கள் ஒரு புள்ளியில் சந்திப்பதைப் போல இது நடந்திருக்கிறது.

''எதிலும் சுதந்திரமே தலையாயது. அந்தச் ''சுதந்திரம் எல்லையற்றதாக இருக்க வேண்டும். முதலாளித்துவ அமெ ரிக்க சமுதாயமே அத்தகைய சுதந்தி ரத்தைப் பெற்றிருக்கிறது'' என்பதை ஒன்றரை மாத அமெரிக்கப் பயணத்திற்குப் பிறகு ஜெயகாந்தன் கண்டறிந்திருக்கிறார்.

''இன்றைய ரஷிய அரசு சுதந்திரச் சந்தை, சுதந்திர ஊடகம், ஜனநாயகம் ஆகி யவற்றின் மீது தாக்குதல் தொடுப்பதற்குக் கூட ஸ்டாலினுடைய கம்யூனிச ஆட்சி யினால் செதுக்கியெடுக்கப்பட்ட கே.ஜி.பி. உளவுப்படைதான் காரணம்'' என்று தனது நாவலுக்கான ஆராய்ச்சியின் மூலம் ஜெய மோகன் கண்டறிந்திருக்கிறார்.

''முதலாளித்துவ அமெரிக்க சமுதா யம், சோசலிச - கம்யூனிச இலட்சியத்தை உள்ளடக்கியிருக்கின்றது. ஏகாதிபத்திய உலகமயமாக்கமே மார்க்சியத்தின் பரிணாம வளர்ச்சிதான்; உலகமயமாக் குதல் என்ற மார்க்சியத்தின் நோக்கம், சோசலிச/கம்யூனிசக் குறிக்கோள்கள் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மூலம் நிறை வேறுகிறது'' என்று சொல்லுவதன் மூலம் சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் மறைமுகமாகக் கொச்சைப்படுத்துகிறார், ஜெயகாந்தன்.

''கம்யூனிச ஆட்சி என்பது, கம்யூனிஸ்ட் தலைவர் தமது சுயநலனுக் காக உருவாக்கிய உளவுப்படையின் ஈவி ரக்கமற்ற இடதுசாரி ஏகாதிபத்திய சர்வாதி காரம்தான்'' என்று அவதூறு செய்வதன் மூலம் முதலாளித்துவ ஏகாதிபத்தியத் துக்கு மறைமுகமாக புகழ்பாடுகிறார் ஜெய மோகன்.

''சோசலிசம்/கம்யூனிசம் என்பது கடந் தகால கனவு, மாயை'' என்கிறார், ஜெயகாந் தன்.

''சோவியத் ரஷியாவின் வீழ்ச்சியுடன் புரட்சி குறித்தும் சமூகமாற்றம் குறித்தும் கம் யூனிஸ்டுகள் கொண்டிருந்த எல்லாக் கனவு களும் அந்தரங்கமாக ரத்து செய்யப்பட் டுவிட்டன'' என்கிறார், ஜெயமோகன்.

மொத்தத்தில் இவ்வாறு கம்யூனிச எதிர்ப்பு, ஏகாதிபத்திய சேவை என்கிற ஒரு புள்ளியில் இந்த இலக்கிய வியாதிக்கா ரர்கள் இணைகிறார்கள்.

எல்லா இலக்கிய வியாதிக்காரர்க ளுக்கும் ''சுதந்திரமே இறுதி இலட்சியம்.'' அவர்களுக்குத் தேவையானதெல்லாம் தமது தனிமனித (வக்கிர) விருப்பங் களையும், நடுத்தர வர்க்க அற்பத்தனங் களையுமே உன்னதமான பண்பாடுகள் என்று கொண்டாட வசதியான சுதந்திரம். தனிமனித இலாப வேட்டையை அடிப் படை உரிமையாகக் கொண்ட முதலாளித் துவ சமூகமே அத்தகைய சுதந்திரத்தைத் தர முடியும்.

தனிமனித இலாப வேட்டையை முற்றாக அகற்றுவதையே இலட்சியமாகக் கொண்ட சோசலிசத்தின் கீழ் தனிமனித

**இலக்கியவாதிகள் வடிவத்தில் கற்பனை வளத்தைக் காட்டுவது வேறு. உள்ளடக்கத்தில் பொய்யைப் புகுத்தி கற்பனையாக எழுதுவது வேறு. உண்மையான இலக்கியவாதிக்கு அறிவு நாணயம் அவசியம் தேவை. ஜெயகாந்தன், ஜெயமோகனிடம் அது கிடையாது.**

படிப்பகம்

www.padippakam.com

(வக்கிர) விருப்பங்களையும் நடுத்தர வர்க்க அற்பத்தனங்களையும் உன்னத மான பண்பாடாக ஏற்கும் சுதந்திரத்தை அனுமதிக்க முடியாது.

இதுவரை சோச்லிசத்துக்கு நேர்ந்த பின்னடைவுகள் எல்லாம் அதன் அரசியல் சாரமாகிய பாட்டாளி வர்க்க சர்வாதிகா ரத்தை நீர்த்துப் போகச் செய்ததன் அல்லது கைவிட்டதன் விளைவுதான். சோசலி சத்தின் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டதன் விளைவுதான். இதற்கு மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதியாக, கறாராக அமலாக்கியதன் விளைவாக சோசலிசத்துக்குப் பின்ன டைவோ, வீழ்ச்சியோ நேர்ந்துவிட வில்லை.

சோவியத் ஒன்றியத்தில், 1950-களின் மத்தியிலேயே குருச்சேவ் கும்பல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு, அனைத்து மக்கள் ஆட்சியைப் பிரகடனப்படுத்தியது. அதுவும் பழைய சர்வாதிகாரத்தின் தொடர்ச்சிதான் எனச் சொல்லி ''கிளாஸ்நாஸ்த்'', ''பிரஸ்த் ரோய்க்கா'' ஆகிய சீர்திருத்தங்களை கோர்ப்சேவ் கும்பல் கொண்டு வந்தது. சீனாவில், கலாச்சாரப் புரட்சியின் ''இடது'' தவறுகளைத் திருத்துதல், நான்கு நவீனப்ப டுத்துதல்கள் என்கிற பெயரில் சந்தை சோச லிசத்தை தெங்சியாவோ பிங் கும்பல் கொண்டு வந்தது.

இவ்வாறாக, அந்நாடுகளில் சோச லிசம் சிதைக்கப்பட்டு முதலாளித்துவம் மீட்கப்பட்டது. இதன் விளைவாக அந்த முன்னாள் சோசலிச நாடுகளில், இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றக் கும்பல்களின் ஆதிக்கம், பிச்சைக்கா ரர்கள் - விபச்சாரிகள், வேலையற்றோர் - வீடற்றோர், சூதாட்டம் - போதை பொருள் வியாபாரம் ஆகியவை நிறைந்த சீரழிவுக ளையே காண்கிறோம். சோசலிசத்தை - பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வீழ்த்தி விட்டு நிறுவப்பட்ட சமுதாயம் செல்வச் செழிப்பையும் சுபிட்சத்தையும் கொண்டு வந்ததா? இல்லையே! ரஷிய ஜாரின் கீழ், சீன நிலப்பிரபுக்களின் கீழ் நிலவிய இரத் தமும் சீழும் வடிந்த சமுதாயத்தை மீட்பதா கத்தானே இருந்தது.

போகட்டும், இவையாவது, இலக்கிய வியாதிக்காரர்கள் அதிகம் அக்கறைப் படாத சமூக, பொருளாதாரப் பிரச்சி னைகள் என்று ஒதுக்கி விடலாம். சோசலிச/கம்யூனிச சர்வாதிகாரத்துக்கு மாற்றாக விடுதலை, சுதந்திரம், ஜன நாயகம் அரசியல் அமைப்பையாவது நிறுவ முடிந்ததா? ரஷியாவில் யெல்த்சின் - புதின், யுகோஸ்லாவியாவில் மிலேசவிச், சீனாவில் லீபெங் ஆகியோரின் பாசிச



**''சோசலிச/கம்யூனிசக் குறிக்கோள்கள் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மூலம் நிறைவேறுகிறது'' என்று சொல்லுவதன் மூலம் சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் மறைமுகமாகக் கொச்சைப் படுத்துகிறார், ஜெயகாந்தன்.**

ஒடுக்குமுறையைத் தானே அந்நாடுகள் கண்டன. தியான்மென் சதுக்கம், செசன்யா, கொசாவோ படுகொலைகள் ஸ்டாலின் காலத்தில் நடந்ததாக அவதூறாகக் கூறப் பட்ட சாவுகளைவிட எந்த விதத்திலாவது குறைவானவையா?

ஆனாலும், முன்னாள் சோசலிச நாடு களின் இன்றைய சீரழிவு ஒடுக்கு முறைக்குக் கூட ஸ்டாலின், மாவோ மீது பழி போடுகிறார்கள். சோசலிச சித்தாந்தத் தையே குறை கூறுகிறார்கள். சோவியத் ஒன்றியத்தில் கூட்டுப் பண்ணைகள், கம்யூன்களை நிறுவும் முயற்சியில் ஸ்டாலின் மேற்கொண்ட நடவடிக்கைகள்; சீனாவில் மாபெரும் பாய்ச்சல் - கலாச்சாரப் புரட்சி ஆகியவை மூலம் மாவோ கையாண்ட நடைமுறைகள்தாம் காரணம் என்று சோசலிசத்தின் எதிரிகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இதிலிருந்து பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை அரசியல் சாரமாக கொண்ட சோச லிச சித்தாந்தமே சுதந்திரம், ஜனநாயகம், மனிதப் பண்பு - மனித நேயம் - மனித உரி மைகளை மதிக்காத சித்தாந்தம் என்று பிரச் சாரம் செய்கின்றனர்.

ஜெயகாந்தனும் சரி, ஜெயமோகனும் சரி, இவர்களைப் போன்ற இலக்கிய வியா திக்காரர்களும் சரி, சோசலிசம், முதலாளித் துவம் ஆகிய இரண்டினுடைய உண்மை யான முகங்களைக் காட்டுவதில்லை. முதலாளித்துவ சமுதாயத்தைப் போலவே சோசலிச சமுதாயமும் பல பகைமையான வர்க்கங்களையும் சர்வாதிகார அரசியல் அமைப்பையும் கொண்டவைதாம். இரண்டு சமுதாயங்களிலுமே பொதுவில் அனைத்துப் பிரிவு மக்களுக்குமான மனிதப் பண்பு, மனித நேயம், மனிதம், சுதந்திரம், ஜனநாயகம் என்பவை கிடையா.

முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், உல கமயமாக்கத்தின் நாயகர்களைப் போல சோசலிசம் தன் உண்மை முகத்தை மூடி மறைத்துக் கொள்வதில்லை. அனைத்து மக்களுக்கான மனிதப் பண்பு, மனித நேயம், மனிதம், சுதந்திரம், ஜனநாயகம் என்றெல்லாம் சோசலிசம் கதைப்ப தில்லை. சோசலிச வேடதாரிகளான போலிக் கம்யூனிஸ்டுகள்தாம் சோலிசத் துக்கு இப்படிப்பட்ட உள்ளடக்கமிருப்ப தாகப் புளுகித் திரிகிறார்கள். இதுவரை அமலாக்கப்பட்ட சோசலிசத்துக்கு மனித முகம் கிடையாது என்று சொல்லிக் கொண்டு பொய் முகத்தைப் பொருத்த முய லுகிறார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்தான் சோசலிசத்தின் உண்மையான முகம். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலம் நிறு வப்படுவதுதான் சோலிசம். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்புவரை உழைக்கும் மக்களை அடக்கி, ஒடுக்கி, சுரண்டி ஆண்டு வந்த முதலாளி வர்க்கம் மட்டுமல்ல; புரட் சிக்குப் பின்பும் புரட்சிக்கு முந்தைய சமு தாய - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு அமைப்பை மீட்க முயலும் அனைவரும் சோசலிசத்தின் எதிரி கள்தாம்.

சந்தைப் பொருளாதாரத்தை அடிப்ப டையாகக் கொண்ட பண்ட உற்பத்தியை அழிப்பதை நோக்கியே சோசலிசப் பயணம் இருக்கும். ஏனெனில் சரக்கு உற்பத்தியும் சந்தைப் பொருளாதாரமும் சுரண்டலையும் தனியுடமையையும் ஒவ்வொரு நிமிடமும் பிறப்பித்துக் கொண்டே இருக்கும். உழைக்கும் விவசா யிகள் சோசலிசக் கட்டுமானத்தில் பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்திகள்தாம் என்றாலும் கம்யூனிசத்தை நோக்கிய அதன் பயணத்தில் விவசாயத்தை கூட்டுற வுமயமாக்குவதிலும், கம்யூன்மயமாக்குவ திலும் எந்த அளவு ஒத்துழைக்கிறார்களோ, தம்மையும் பாட்டாளி வர்க்கமாக மாற்றிக் கொள்கிறார்களோ அதைப் பொருத்தே

படிப்பகம்

www.padippakam.com



அந்த நேசம் அமையும். விவசாயிகளின் வர்க்க குணமாகிய சிறு உடமை உறவைக் காப்பதற்கு அவர்கள் வலிந்து நிற்பதை பாட்டாளி வர்க்கம் ஏற்க முடியாது. ஏனென்றால் பொதுவில் தனிவுடமை மட்டுமல்ல, குறிப்பாக சிறு உடமையும் சோசலிசத்துக்கு எதிரானது.

சோசலிச சமுதாயத்தில் முதலாளி வர்க்கமும், அதற்கு எதிரான வர்க்கப் போராட்டமும் மறைந்து விடுவதில்லை, நீடிக்கின்றன. புரட்சி வென்ற பிறகும், சோசலிசம் நிறுவப்பட்ட பிறகும் எதிரிகள் இருக்கிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? கட்சிக்குள் இருக்கிறார்கள். கட்சிக்குள் ஒளிந்து கொண்டு முதலாளித்துவத்தை மீட்பதற்குப் போராடுகிறார்கள். கட்சிக்கு வெளியிலும் இருக்கிறார்கள். இந்த முதலாளித்துவ மீட்பாளர்களை அடக்கி ஒடுக்குவதற்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமாக இருக்கிறது.

சோசலிச இலட்சியத்துக்கு எதிரானவர் எவராயிருந்தாலும் அவரிடம் துளியும் மன்னிப்போ, மனிதநேயமோ காட்ட முடியாது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் ஈவிரக்கமின்றி அடக்கி, ஒடுக்கப்படுவார்கள் என்று பட்டவர்த்தனமாக - பகிரங்கமாகச் சொல்லுவதும் செய்வதும்தான் சோசலிசம். இது சோலிசத்தின் பலமே தவிர பலவீனமல்ல.

சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் நிலவுவதை வெறுமனே அங்கீகரிப்பவர்கள் மார்க்சியர்கள் கிடையாது. வர்க்கப் போராட்டத்தைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக வளர்த்தெடுப்பவர்கள்தான் மார்க்சியர்கள்.

ஆனால், இன்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு சோசலிசம், கம்யூனிசம் என்பவனவற்றை வெறும் மனிதநேயம், மக்கள் நலன் என்பதாகக் கொச்சைப்படுத்தி பொருள் கூறி, செயல்படும் பல அமைப்புகள் தம்மை சோசலிஸ்டுகள், மார்க்சிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் என்று உரிமை பாராட்டிக் கொள்கின்றன. பிரான்சை ஆண்ட மிட்டராண்ட், ஜெர்மனியை ஆண்ட வில்லிபிராண்ட், தற்போது பிரிட்டனை ஆளும் டோனி பிளெயர் கூட ஏகாதிபத்தியக் கொள்கைகளைப் பின்பற்றிக் கொண்டே, தமது கட்சிகளை சோசலிஸ்ட் என்றும் லேபர் கட்சி என்றும் கூறிக் கொள்கின்றனர். அதுபோலத்தான் உலகில் பாட்டாளி வர்க்கக் கட்சி என்று கூறிக் கொள்ளும் முதலாளித்துவக் கட்சிகள் செயல்படுகின்றன. ஆனால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்று,

**"கம்யூனிச ஆட்சி என்பது, கம்யூனிஸ்ட் தலைவர் தமது சுயநலனுக்காக உருவாக்கிய உளவுப்படையின் ஈவிரக்கமற்ற இடதுசாரி ஏகாதிபத்திய சர்வாதிகாரம்தான்" என்று அவதூறு செய்வதன் மூலம் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கு மறைமுகமாக புகழ் பாடுகிறார் ஜெயமோகன்.**

அந்த இலட்சியத்துக்காகப் போராடாத எவரும் உண்மையில் சோசலிஸ்டோ கம்யூனிஸ்டோ கிடையாது.

ஒரு கம்யூனிஸ்டு தனது அரசியல் நிலையை ஒருபோதும் இரகசியமாக வைப்பதில்லை. ஆனால் ஒரு முதலாளி - ஏகாதிபத்தியவாதி மற்றும் அவனுடைய அரசியலுக்கு முட்டுக் கொடுக்கும் சித்தாந்தவாதிகள் என்ன செய்கிறார்கள்? தமது முகத்தை மூடிக் கொள்கிறார்கள். பொய்யான தோற்றத்தையே வெளிக்காட்டிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் சுதந்திரமும் ஜனநாயகமும் எப்படி இருக்க முடியும்? இவர்களின் மனிதப் பண்பு - மனிதநேயம் - மனிதம் எப்படி உண்மையானதாக இருக்க முடியும்?

சான்றாக, உலகமயமாக்கம், என்பது உலகிலுள்ள அனைத்து நாடுகள் - தேசங்கள் அனைத்து மக்களுடைய சுதந்திரமான தொழில், பொருளாதார வளர்ச்சிக்கானது என்று ஏகாதிபத்தியவாதிகள் கூறுகிறார்கள். அதற்கே ஜெயகாந்தன்களும், ஜெயமோகன்களும் லாலி பாடுகிறார்கள். ஆனால்,

ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் உலக மேலாதிக்கம்தான் உலகமயமாக்கத்தின் உண்மையான முகம். உலக மேலாதிக்கம் (World Hegemony) என்பது, மூலதனம், உழைப்பு, சந்தை ஆகியவற்றை சர்வதேசியமயமாக்கும் பொருளாதார நடவடிக்கையாடு நின்றுவிடுவதில்லை. உலக மக்கள், தேசங்களின் பண்பாட்டு அடையாளங்களை சிதைத்து, அவர்களின் இறையாண்மையைப் பறித்து அரசியல், இராணுவ, பண்பாட்டு மேலாதிக்கத்தை நிறுவுவதும் உலகமயமாக்கத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த பூமியின் மீது மட்டுமல்ல இந்த மண்ணையும் விண்ணையும் சேர்த்து மேலாதிக்கம் செய்வதுதான் உலகமயம்.

பன்னாட்டுத் தொழிற்கழகங்கள், தேசங்கடந்த தொழிற் கழகங்கள் மற்றும் வங்கிகளின் ஈவிரக்கமற்ற சுரண்டலுக்காக ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகள் ஏந்திவரும் ஆயுதங்கள் தாம் உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எல்) உலகவர்த்தக நிறுவனம் (டபிள்யூ.டி.ஓ) ஆகியன. வளர்ந்த பல நாடுகளின் தேசிய வருமானங்களுடைய கூட்டுத் தொகையை விடவும் சக்தியும் வல்லமையும் வாய்ந்தவை இந்த பன்னாட்டு, தேசங்கடந்த தொழிற் கழகங்கள் - வங்கிகள் இவற்றின் இரும்புப் பிடியிலிருந்து விடுபட முயலும் எந்தவொரு தேசத்தின் மீதும் பல்முனை இராணுவத் தாக்குதல் தொடுப்பதற்கு ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகள் எப்போதும் தயார்நிலையில் உள்ளன. ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் உலக மேலாதிக்கத்தின் கீழ் நடந்துவரும் உலகமயமாக்கத்தில் சுதந்திரம் ஜனநாயகம், மனிதப் பண்பு - மனிதநேயம் - மனித உரிமை ஆகியவற்றுக்குத் துளியும் இடம் கிடையாது.

சோசலிசம், முதலாளிய - ஏகாதிபத்திய - உலகமயமாக்கம் பற்றிய இது வரை சொன்ன வரையறுப்பும் விளக்கமும் ஜெயகாந்தனுக்கும் தெரியும், ஜெயமோகனுக்கும் தெரியும், வேறுபிற இலக்கியவியாதிக்காரர்களுக்கும் கூட தெரியும். தெரிந்தும்கூட சோசலிசத்தில் அனைவருக்குமான மனிதப் பண்பு - மனிதநேயம் - மனித உரிமை, சுதந்திரம், ஜனநாயகம் இல்லை என்று ஜெயமோகன் வகையறாக்கள் திரும்பத் திரும்பக் கூச்சலிடுவது ஏன்? அதுபோலவே, முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தில் இவை இருப்பதாக ஜெயகாந்தன் வகையறாக்கள் திரும்பத் திரும்பப் புளுகுவது ஏன்?

இலக்கியவாதிகள் வடிவத்தில் கற்பனை வளத்தைக் காட்டுவது வேறு, உள்ளடக்கத்தில் பொய்யைப் புகுத்தி கற்பனையாக எழுதுவது வேறு. உண்மையான இலக்கியவாதிக்கு அறிவு நாணயம் அவசியம் தேவை. ஜெயகாந்தன், ஜெயமோகனிடம் அது கிடையாது.

— தொடரு

www.padippakam.com




# கருப்பு சூரியன்

**வங்காளி சிறுகதை - ஆஷா பூர்ணாதேவி**

என் பெரியண்ணாவுக்கு இரண்டு பெண்கள். இருவருக்குமிடையே ஆகாயத்திற்கும் பாதாளத்திற்குமுள்ள வேற்றுமை.

என் சின்ன அண்ணி பெரிய அண்ணியிடம் சொல்லுவாள் ''பெரியவ் பொறந்தப்புறம் நீ உடம்பு தேறணும்மனு நிறைய டானிக் குடிச்சியே, அது உண்மைலே தாரோட எஸன்சாயிருந்திருக்கணும். அதுதான் இந்த மாதிரி அட்டைக்கரியா ஒரு பொண்ணு பொறந்திருக்கு உனக்கு''!

இரண்டு பெண்களுக்கும் பொருத்தமாகப் பெயர் வைத்ததும் சின்ன அண்ணிதான். பெரியவள் பெயர் மல்லிகா, சிறியவள் பெயர் கேண்ட்டு. (மணமற்ற ஒருவகைக் காட்டுப் பூவின் பெயர் கேண்ட்டு).

வயதில் சிறியவளாயினும் கேண்ட்டுதான் பார்ப்பதற்குப் பெரியவளாகத் தோன்றுவாள். பெரியதலை, நீளமான கைகால்கள், சதுரமான தோள்பட்டை, தட்டை முகம், அதில் பெண்மையில் நளினம் சற்றுமில்லை.

காளி மாதிரி ஒரு கூடை தலைமுடி இல்லாவிட்டால் அவள் பெண்ணுடையணிந்த ஓர் ஆண் பிள்ளை என்றுதான் நினைப்பார்கள்.

அவளுக்கு நேர்மாறாக ஒற்றை நாடி உடம்பு மல்லிகாவுக்கு. ரோஜா நிறம். பார்த்தால் வெள்ளைக்கார பொம்மை மாதிரி இருப்பாள். நீண்ட கண்கள். கூர்மையான மூக்கு, மெல்லிய உதடுகள், கன்னம் மட்டும் சற்று உப்பியிருக்கும். அது மேட்டுக் குடிக்கேற்ற உப்பல். அவளது நடையுடை பாவனைகளும் அவளது மேட்டுக் குடிப்பிறப்பை பறைசாற்றின.

சிறு வயதில் இருந்தே மல்லிகா கட்டிலில் உட்கார்ந்து கொண்டு பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடுவாள். மண்ணைத் தொட மாட்டாள். அவ்வளவு சுத்தம். கேண்ட்டுவோ நாள் முழுவதும் புழுதியில்தான் விளையாடுவாள். தெருப் பையன்களோடு கிட்டிபுள், கோலி விளையாடுவாள், பதை பதைக்கும் வெயிலில் மொட்டை மாடியில் பட்டம் விடுவாள்.

என்ன முயன்றும் அவளுடைய முரட்டுத் தனத்தை மாற்ற முடியவில்லை. திட்டு, அடி, அறைக்குள் அடைத்து வைத்தல், பட்டினி போடுதல் போன்ற எல்லாத் தண்டனைகளும் வீண்.

பள்ளி செல்லத் தொடங்கிய பின் கேண்ட்டுவின் முரட்டு விளையாட்டுகள் சற்றுக் குறைந்தாலும், முற்றிலும் நின்றுவிடவில்லை. பள்ளியிலும் அவளைப் பற்றி ஏகப்பட்ட புகார்கள் 'கேண்ட்டு இன்னிக்கு கிளாசிலே ஆறுகாப்ளி தின்னா' 'இன்னிக்கு டீச்சரை எதுத்துப் பேசினா'... அவள் அடிக்கடி புத்தகத்தைத் தொலைத்து விடுவாள், ஹோம்ஒர்க் செய்வதில்லை. டீச்சர் திட்டினால் காதுகளைப் பொத்திக் கொண்டு உணர்ச்சியில்லாமல் உட்கார்ந்திருப்பாள்...

மென்கலைகளுக்கும் கேண்ட்டுவின் முரட்டுத் தனத்துக்கும் வெகு தூரம். ''உன் அக்கா எவ்வளவு அழகாப் படம் வரையறா. உனக்கு ஒண்ணும் தெரியல்லையே'' என்று யாரோ கேண்ட்டுவைக் கேலி செய்தபோது அவள் ஏளனமாக உதட்டைப் பிதுக்கி 'ஆமா, சித்திரம் வரையறது பெரீய்ய காரியமாக்கும்' என்று சொல்லிவிட்டு, மல்லிகாவின் காகிதம், பென்சில், சித்திரம் தீட்டும் பிரஷ் இவற்றையெடுத்து ஒரு நிமிஷத்தில் ஓர் எருமையின் படத்தை வரைந்து விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com

முழு எருமையின் சித்திரமல்ல, எருமையின் தலையும் கழுத்துந்தான். தலையைச் சற்றே குனிந்து கொண்டு ஆக்ரோஷமாகப் பாயத் தயாராயிருக்கும் தோற்றம்.

அந்தப் படத்தைப் பார்த்து வீட்டில் பலர் பல விதமாகக் கேலி செய்தார்கள். ''கேண்ட்டுவோட மனப்போக்கை அப்படியே காட்டுது சித்திரம்...'' என்றார் ஒருவர். ''இது கேண்ட்டுவோட ஆத்மாவின் பிரதிபலிப்பு...'' என்றார் இன்னொருவர். படத்தைக் கிழிச்சு எறிஞ்சுடு, இல்லைன்னா எமனோட வாகனந்தான் விரட்டிக்கிட்டு வருதுன்னு நினைச்சுக்குவாங்க' என்றார் பெரியண்ணா.

கேண்ட்டு ஒரு தடவை உபயோகித்ததில் பென்சில் கூர் மழுங்கிவிட்டது. பிரஷ் வீணாகி விட்டது.

மல்லிகா உரக்கக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்பவளல்ல. அவள் அமைதியாக ஆனால் அழுத்தமாகத் தங்கையிடம் சொன்னாள். ''நீ இனிமேல் என் ரூமுக்குள்ளே வராதே!''

கல்லூரிக்கு வந்த பிறகு மல்லிகாவுக்கு வீட்டில் படிப்பதற்கு தனியாக ஓர் சிறிய அறை கிடைத்திருந்தது. அதை அவள் அழகாக அலங்கரித்து வைத்திருந்தாள்.

கேண்ட்டு சட்டென்று பதிலளித்தாள். ''உன் ரூம் ஆந்தைக் கூடு மாதிரி இருக்கு. அதுக்குள்ளே நான் ஏன் வரேன்?''

எல்லாரையுமே இப்படித்தான் தூக்கியெறிந்து பேசுவாள் கேண்ட்டு. யாரிடமும் மரியாதை இல்லை. பெரியவர்களிடம் அடக்கமாக நடந்து கொள்ளத் தெரியாது அவளுக்கு.

ஆனால் ஒன்று — அவளுக்கு என்னிடம் பாசம் உண்டு. பாசந்தான், மரியாதை இல்லை. காரணம் மரியாதை என்ற சொல்லே அவளது அகராதியில் இல்லை.

கேண்ட்டு என்னிடம் சற்று ஒட்டுதலாயிருக்கிறாள், என்பதற்காகப் பெரிய அண்ணியும் என்னிடந்தான் தன் புகார்களைச் சொல்லுவாள். ''இந்தப் பொண்ணு இப்படியே சீரழிஞ்சு போகணுமா? நீங்க ஒருத்தரும் அவளைச் சரி பண்ண முடியாதா?... நீங்க இவ்வளவு புத்தகம் எழுதறீங்க, ஒரு சின்னப் பொண்ணை வழிக்குக் கொண்டு வரத் தெரியல்லியே!''

''வயசுக்கு வந்த பொண்ணு. நாள் முழுக்க ஊர்ப் பசங்களோட சுத்திக்கிட்டிருக்கா. அவங்களோடே கேரம் விளையாடறா, பட்டம் விடறா, எங்கெங்கேயிருந்தோ கதை புத்தகம் வாங்கிக்கிட்டு வந்து படிக்கிறா... இவளோட எதிர்காலம் என்ன ஆகும்? இருக்கிற அழகுக்கு கல்யாணந்தான் எப்படி நடக்கும்?''

கேண்ட்டுவுக்குக் கல்யாணம் நடக்குமா என்பது பற்றி எனக்கும் சந்தேகம்தான். இருந்தாலும் அண்ணியை சமாதானப்படுத்துவதற்காக ''கலியாணங்கறது பகவான் கையிலே இருக்குன்னு நீங்க தானே சொல்லுவீங்க...'' என்றேன்.

''அது மனுஷாளோட கலியாணத்தைப் பத்தி சொல்றது, மிருகக் காட்சி சாலையிலே இருக்கற மிருகங்களோட கலியாணத்தைப் பத்தி இல்லே...'' என்று சொன்னாள் அண்ணி.

சற்று நேரத்திற்குப் பின் கேண்ட்டுவைப் பார்த்தேன். 'ஏய், எங்கே போயிக்கிட்டிருக்கே?' அவளை இறுகப் பிடித்துக் கொண்டு கேட்டேன்.

அவள் என் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தவாறு சொன்னாள், ''நான் தபலா கத்துக்கப் போயிக்கிட்டிருக்கேன்...''

> **வயதில் சிறியவளாயினும் கேண்ட்டுதான் பார்ப்பதற்குப் பெரியவளாகத் தோன்றுவாள். பெரியதலை, நீளமான கைகால்கள், சதுரமான தோள்பட்டை, தட்டை முகம்; அதில் பெண்மையில் நளினம் சற்றுமில்லை.**
>
> **காளி மாதிரி ஒரு கூடை தலைமுடி இல்லாவிட்டால் அவள் பெண்ணுடை யணிந்த ஓர் ஆண் பிள்ளை என்றுதான் நினைப்பார்கள்.**

நான் திடுக்கிட்டேன், ''தபலா கத்துக்கவா?... உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா?''

''ஏன் பைத்தியந்தான் தபலா கத்துக்குமா?''

''அதில்லே... பெண் பிள்ளை தபலா வாசிப்பாளா?...''

''அப்படீன்னா பெண் பிள்ளைங்க என்ன செய்வாங்க? அக்கா மாதிரி 'டொயிங், டொயிங்'னு பூனை ஊளையிடற சத்தம் எழுப்புவாங்களா?''

மல்லிகா ஏதோ தந்தி வாத்தியம் இசைக்க கற்றுக் கொள்கிறாள் போலும்.

''அவ என்ன செஞ்சாலும் வீட்டிலே உக்காந்துக்கிட்டுத்தானே செய்யறா? உன் மாதிரி வெளியே திரியல்லியே! சரி, நீ எங்கே போய்த் தபலா கத்துக்கப் போறே?''

''பிண்ட்டு வீட்டிலே?''

அவளுடைய பதிலைக் கேட்டு அண்ணி மாதிரி எனக்கும் கவலை வந்து விட்டது. ''பிண்ட்டு மாதிரி காலிப்பசங்க வீட்டுக்கெல்லாம் நீ போகலாமா?''

''உன்கிட்டே என்ன காலித்தனம் செஞ்சான் பிண்ட்டு?''

''என்கிட்டே என்ன செய்வான்? நாள்பூராத் திண்ணையிலே உக்காந்துக்கிட்டு வம்பளக்கிறான், சிகரெட் குடிக்கிறான்...''

''சிகரெட் குடிக்கிறானா?'' ஹா ஹாவென்று சிரித்து விட்டாள் கேண்ட்டு. பிறகு ஏளனமாகச் சொன்னாள், ''ஊசியலே ஓட்டையிருக்குன்னு கேலி பண்ணிச்சாம் சல்லடை!.... உங்களிலே யாரு சிகரெட் குடிக்காமே இருக்கீங்க?... சிகரெட்டைப் பிடிச்சுப் பிடிச்சு உங்க கைவிரல் தடிச்சுப் போச்சு!''

''எங்க வயசென்ன, அவன் வயசென்ன?'' கோபமாகக் கேட்டேன்.

''அப்படின்னா நீங்க அவனை விட மோசம்னு அர்த்தம். அவன் முட்டாள், சின்ன வயசு, தெரியாமல் செய்யறதை நீங்க பெரியவங்க, படிச்சவங்க தெரிஞ்சே செய்யறீங்க!''

இந்த மாதிரி நேரடித் தாக்குதலால் எரிச்சலடையாமல் இருக்க நான் ஒரு மகாத்மாவா? நான் கோபித்துக் கொண்டு ''இதோ பாரு, நீ தபலா கத்துக்கப் போகக் கூடாது'' என்று அதட்டினேன்.

''சரி போகல்லே'' என்று சொல்லி விட்டு அங்கேயே உட்கார்ந்து விட்டாள் கேண்ட்டு.

அவள் என்னை எதிர்த்துப் பேசாததில் எனக்கு ஆச்சரியந்தான். ஆனால் அவள் இப்படி அடங்கிப் போவதில் ஒரு அசௌகரியம். இந்த 'மூடில்' அவள் நல்ல புத்திமதியைக் காதில் போட்டுக் கொள்ள மாட்டாள். என்றாலும் அவளிடம் இதமாகப் பேசினேன். ''நல்ல குடும்பத்துப் பெண் தபலா வாசிச்சுக் கேட்டிருக்கியா?''

ஏரிந்து விழுந்தாள் கேண்ட்டு. ''மறுப

www.padippakam.com

டியும் அதைப் பத்தி ஏன் பேசறே? நான்தான் போகல்லேன்னுட்டேனே?''

கேண்ட்டு இப்படி சொன்ன பேச்சைக் கேட்பது ஆச்சரியந்தான். எனக்குச் சற்றுக் கலக்கம் ஏற்பட்டு விட்டது. அவளை சமாதானம் செய்யும் நோக்கத்துடன், ''ஏன் கோவிச்சுக்கறே?'' என்று கேட்டேன்.

''எனக்கொண்ணும் கோவமில்லே...''

''நீ தபலா கத்துக்கறதை நான் தடுக்க நேங்கறதுக்காக...''

''நீ தடுத்தா நான் கேட்டுடுவேனா?... எனக்கே தபலா கத்துக்கறதிலே அவ்வளவு ஆர்வமில்லே... பொழுது போகல்லே, ஏதாவது செய்யணுமேன்னுதான்...

''மத்த பெண் பிள்ளைங்க என்ன செய்யறாங்க? உன் அக்கா என்ன செய்யறா? அதை நீ செய்யக் கூடாதா?''

''அவங்கள்ளாம் புத்திசாலிகள்... படிக்கிறாங்க, பரீட்சை எழுதறாங்க...''

''நீயும் படியேன்! பிரைவேட்டாகப் பரீட்சை எழுதேன்! நீ படிக்கிறதாயிருந்தா நான் அதுக்கு ஏற்பாடு பண்றேன்''

''வேண்டாம்ப்பா ஆளை விடு! அவள் கைகூப்பி நமஸ்காரம் செய்தாள்''

''அப்படின்னா நீ இப்படியே குரங்கா இருப்பியா?... உனக்கு கல்யாணம் ஆகாதுன்னு உன் அம்மா சொல்றாளே!''

கேண்ட்டு சிரித்தாள். ஆறதா இல்லையான்னு பாரேன்!

நான் அவளுடைய பின்னலைப் பிடித்துக் கொண்டு கேட்டேன். ''உன் பேச்சுக்கு என்ன அர்த்தம்? சொல்லு''

''அர்த்தம் தெரியல்லியா?''

''உன் மாதிரி காளிதேவியை யார் கலியாணம் பண்ணிக்குவான்?''

''பாத்துக்கிட்டே இரு!''

''அவன் பேரைச் சொல்ல மாட்டியா?''

''சரி, சித்தப்பா, சரி... ஒரு நாள் இழுத்துக்கிட்டே வரேன்... ஆனா நீ வீட்டிலே ஒருத்தர்கிட்டேயும் சொல்லக் கூடாது! அவனுக்கு ரொம்பக் கூச்சம்...''

எனக்கு உண்மையிலேயே கவலை ஏற்பட்டுவிட்டது. இது என்ன விபத்து? யாரை நேசிக்கிறாள் கேண்ட்டு?

மல்லிகா காதல் வலையில் சிக்க மாட்டாள். அவள் கண்ணியமானவள். அவள் பி.ஏ. பாஸ் செய்ததுமே வீட்டார் அவளுக்காக ஒரு ராஜகுமாரனைத் தேடிக் கொண்டு வருவார்கள் என்று அவளுக்குத் தெரியும். பெண் பார்த்தல், நிச்சயதார்த்தம், கொடுக்கல் வாங்கல் பற்றிய லௌகிகப் பேச்சு, உடம்பில் மஞ்சள் பூசுவது, முடிச்சுப் போடுதல், ஏழு சுற்று என்று படிப் படியாக 'முறைதவறாத' கலியாணம் நடக்கும் அவளுக்கு. அவள் கழுத்தில் மல்லிகை மாலையணிந்து குறிப்பிட்ட நல்ல கணத்தில் தன் புதுக்கணவனுடன் பார்வை பரிமாறிக் கொள்வாள். பிறகு தன் பெட்டகத்தைத் திறந்து இதயத்தை அவனிடம் கொடுப்பாள். கலியாணத்திற்கு முன்னாலேயே காதலால் மனம் உடைந்து போகுமளவுக்கு அவள் அசடல்ல, அவசரக்குடுக்கையும் அல்ல.

கேண்ட்டுவைப் புரிந்து கொள்வது மிகவும கஷ்டமாக இருந்தது. ஒருவனிடம் காதல் வசப்படுமளவுக்கு பெண்மை இருக்கிறதா அவளிடம்? யார் அவளைக் காதலிப்பான்?

> **''நான் தபலா கத்துக்கப் போயிக்கிட்டிருக்கேன்...''**
>
> **''தபலா கத்துக்கவா?... உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா?''**
>
> **''ஏன் பைத்தியந்தான் தபலா கத்துக்குமா?''**
>
> **''அதில்லே... பெண்ணு பிள்ளை தபலா வாசிப்பாளா?...''**
>
> **''அப்படின்னா பெண் பிள்ளைங்க என்ன செய்வாங்க? அக்கா மாதிரி 'டொயிங், டொயிங்'னு பூனை ஊளையிடற சத்தம் எழுப்புவாங்களா?''**

ஒருநாள் அவளைப் பார்த்துச் சொன்னேன் ''உன் மனசைக் கவர்ந்த ஒரு குரங்கையோ ஆந்தையையோ என்கிட்டே கூட்டிக் கிட்டு வரேன்னு சொன்னியே... ஏன் கூட்டிக்கிட்டு வரல்லே?''

சற்றே சோர்வாகப் பதில் அளித்தாள் கேண்டு ''அவனுக்கு உடம்பு சரியில்லே...''

''அம்மா கிட்டே சொன்னியா?''

''அம்மா கிட்டேயா? அவகிட்டே என்ன சொல்றது?''

''அந்தப் பையனோட விஷயத்தைத்தான்...''

''ஆகா, நீ இப்பத்தான் சுவர்க்கத்தில இருந்து இறங்கி வந்துருக்கியாக்கும்! உலகத்து வழக்கம் ஒண்ணும் தெரியாதாக்கும்.'' கோபத்தோடு படபடத்தாள் கேண்ட்டு ''நான் அவனைப் பத்திச் சொன்னா உன் அண்ணி எனக்கு ஸ்வீட் கொடுப்பா, இல்லையா?''

''ஆனா இந்தத் திருட்டுத் தனம் சரியில்லே கேண்ட்டு. தவிர நீ இந்த மாதிரி எல்லாம் ஒளிவு மறைவா ஒண்ணும் செய்ய மாட்டியே!''

அவளது குரலில் மறுபடியும் சோர்வு. ''நான் இஷ்டப்பட்டா இந்த மாதிரி விஷயத்தை மறைச்சு வச்சிருக்கேன்! அவன் என் காலிலே விழுந்து வேண்டிக்கிட்டான். 'வீட்டிலே சொல்லிடாதே! சொன்னா உன்னை வெளியே வரவிடமாட்டாங்க. நாம சந்திக்க முடியாது'ன்னு. அவன் உடம்பு சரியானதும் என்னைக் கூட்டிக் கிட்டு எங்கேயாவது போய்க் கலியாணம் பண்ணிக்கிறதாச் சொல்லியிருக்கான்.''

நான் திகைத்துப் போய்விட்டேன். பேச வார்த்தைகள் வரவில்லை எனக்கு. பிறகு சற்றுச் சமாளித்துக் கொண்டு ''நீ இப்படியெல்லாம் செய்யலாமா ஒரு நல்ல குடும்பத்துப் பொண்ணு?''

''பின்னே என்ன செய்யறது? நம்ம வீட்டிலே என்னை அவனுக்குக் கலியாணம் பண்ணி வைப்பாங்களா? இந்த வீட்டுக் கௌவரம் என்ன ஆகும்.''

''நம்ம வீட்டுக் கௌரவத்தை நாசம் பண்ணக் கூடிய ஒருத்தனோடே பழகிக் கிட்டிருக்கே!''

''நான் செய்யற எந்தக் காரியத்தாலேதான் உங்க கௌரவம் கெட்டுப் போகாமே இருக்கு? நானும் அக்கா மாதிரி ஒரு மெழுகுப் பொம்மையா இருந்திருந்தா உங்களுக்கு சந்தோஷமாயிருந்திருக்கும்...''

அவளுடைய பேச்சைக் கேட்டு எனக்கு ஒரே ஆச்சரியம். கேண்ட்டுவுக்குத்தன் அக்கா மேல் பொறாமை என்றுதான் நினைத்திருந்தேன் இவ்வளவு நாள். அதுதான் இயற்கை. இல்லை, அவள் அக்காவைப் பார்த்து பொறாமைப்படவில்லை. மாறாக அக்காவை அற்பமாக நினைக்கிறாள்!

அது போகட்டும் இப்போது ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும்!

''அந்தப் பையனோட விலாசத்தைக் கொடு!''

''கொடுக்கறேன், சித்தப்பா. அவசரப்படாதே. நான் இப்போ மருந்துக் கடைக்குப் போகணும் மருந்து வாங்க...''

''மருந்து வாங்க நீயா போறே?''

www.padippakam.com

''பின்னே யாரு போவாங்க? அவனுக்கு வேலைக்காரங்க இருக்காங்களா?'' என்று பதில் கேள்வி கேட்டுவிட்டு அங்கிருந்து ஓடிப்போய் விட்டாள் கேண்ட்டு.

திடீரென்று மல்லிகாவின் கல்யாணப் பேச்சு எழுந்து வீடு களை கட்டிவிட்டது.

சின்ன அண்ணியின் மாமா பிள்ளை அமெரிக்காவில் இஞ்சினீயராக இருப்பவன். மூன்று மாத லீவில் வருகிறானாம். மல்லிகாவின் போட்டோவைப் பார்த்து அவனுக்கு அவளைப் பிடித்து விட்டதாம். அவளைக் கலியாணம் பண்ணிக் கொண்டு கூடவே கூட்டிக் கொண்டு போகப் போகிறானாம்.

சின்ன அண்ணி பெரிய வீட்டுப் பெண். ''பணம் போதல்லேன்னா நான் எங்க வீட்டிலேருந்து கடன் வாங்கித் தரேன். கலியாணத்தை மாப்பிள்ளை யோட அந்தஸ்துக்குத் தக்க மாதிரி செய்யுங்க'' என்று உற்சாகம் அளித்தாள் அவள்.

வீட்டில் எப்போதும் ஷாப்பிங் பற்றித்தான் பேச்சு. சின்ன அண்ணியின் ஏற்பாட்டில் காசியில் இருந்து பனராஸ் பட்டுப் புடவையையும் காஷ்மீரில் இருந்து மாப்பிள்ளையின் சூட் துணியும் வரவழைக்கப்பட்டன.

இந்த அமர்க்களத்தில் ஒருவருக்கும் கேண்ட்டுவைப் பற்றிய நினைவே இல்லை. அவள் எப்போது, எங்கே வீட்டை விட்டுப் போகிறாள். எப்போது திரும்புகிறாள். எப்போது சாப்பிடுகிறாள். சாப்பிடுகிறாளா இல்லையா என்பதை யாரும் கவனிக்கவில்லை.

திடீரென்று ஒரு நாள் எல்லோரின் கவனமும் அவள் மேல் திரும்பும் படியாக ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது.

கலியாணத்துக்கு முதல் நாள்...

சின்ன அண்ணியின் பர்சில் இருந்த பணத்தில் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் காணோம்.

எல்லா இடங்களிலும் தேடியாகிவிட்டது. வேலைகாரர்களை நிறுத்தி வைத்து விசாரணை செய்தாகிவிட்டது...

இந்த சமயத்தில் அங்கே திடீர்ப் பிரவேசம் செய்தாள் கேண்ட்டு.

அவளது முகம் வற்றிக் கிடந்தது. கண்கள் இடுங்கிப் போயிருந்தன. எண்ணெய் படாத தலைமுடி. ஏற்கனவே அவலட்சணமான கேண்ட்டு இன்னும் குரூபியாகத் தோற்றமளித்தாள்.

''இங்கே என்ன கூட்டம்?''

அவளுடைய தோற்றத்தைப் பார்த்து எரிச்சல் வந்தது பெரிய அண்ணிக்கு ''பத்திரகாளி மாதிரி வந்து நிக்கிறியே! எங்கேயிருந்து வரே?''

''மயானத்திலிருந்து தான்!'' வெடுக்கென்று பதில் வந்தது கேண்ட்டுவிடமிருந்து. பிறகு அவள் என் பக்கம் திரும்பி, ''நான் கேட்டதுக்குப் பதில் சொல்லலியே! இங்கே என்ன அமளி?''

நான் விஷயத்தைச் சொன்னேன்.

அவள் வழக்கத்துக்கு விரோதமாக அமைதியான குரலில் கேட்டாள், ''எவ்வளவு ரூபா?''

''நூறு ரூபா...''

''அதுக்காக வேலைக்காரங்களை இம்சை பண்ண வேண்டாம். நான்தான் அந்தப் பணத்தை எடுத்தேன்.''

இடி விழுந்தாற் போல் எல்லோருக்கும் அதிர்ச்சி.

பெரிய அண்ணி கடுமையாகக் கேட்டாள், ''எதுக்கு எடுத்தே?''

''சொல்ல மாட்டேன்!''

''சொல்ல மாட்டியா? சொல்ல மாட்டியா?... என்ன திமிர் உனக்கு! சீ, இவ்வளவு மட்டமா ஆயிட்டியா? கடைசியிலே திருடக்கூட ஆரம்பிச்சுட்டியா?''

''அப்பா பணந்தானே அது!'' அலட்சியமாகப் பதில் சொன்னாள் கேண்ட்டு.

''ஆகா, ஆர்குமெண்ட் பிரமாதம்! அப்பா பணம்னா சொல்லாமே எடுத்துக்கிறதோ?'' சின்ன அண்ணா கேட்டார்.

கேண்ட்டு சின்ன அண்ணாவைச் சற்றும் பொருட்படுத்தாமல் பெரிய அண்ணாவை பார்த்துச் சொன்னாள், ''நான் உனக்கு ஒரு நல்ல பொண்ணாயிருந்தா என் கலியாணத்துக்காகச் செலவு பண்ணுவியா இல்லியா, அந்தக் கணக்கிலே இந்தப் பணத்தைச் சேர்த்திக்கோ.''

இன்னொரு இடி! சொந்த அப்பா கிட்டே என்ன பேச்சுப் பேசுகிறாள் பெண்! கொஞ்சங்கூட வெட்கமில்லை!

கோபந்தாங்காமல் குதித்தாள் பெரிய அண்ணி, ''இந்த மாதிரி அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசினால் ஆச்சா! அதெல்லாம் நடக்காது! பணத்தைத் திருப்பிக் கொடு!''

''பணம் இல்லே... செலவாயிடுச்சு...''

''செலவாயிடுச்சா? என்ன பண்ணினே அவ்வளவு பணத்தை?''

''சொல்ல மாட்டேன்னுதான் முன்னாலேயே சொன்னேனே!''

சின்ன அண்ணா ஏளனமாகச் சொன்னார். ''சரி, சொல்ல அசௌகரியமாக இருந்தால் சொல்ல வேணாம். ஆனால் பணத்தை எடுத்துக்கறதுக்கு முன்னாலே கொஞ்சம் தயவு பண்ணி சொல்லிட்டு எடுத்திருக்கலாமே! இவ்வளவு பேர் மேலே அனாவசியமா சந்தேகம் ஏற்பட்டிருக்காதே...''

போக்கிரித் தனமாகச் சிரித்தாள் கேண்ட்டு. ''சமுத்திரத்திலேருந்து ஒரு குடம் தண்ணி எடுத்தா யாரு அதைக் கவனிக்கப் போறாங்கன்னு நினைச்சேன்... மெழுகுப் பொம்மைக்கு ஷோ கேஸ் வாங்க இருபதாயிரம் இருபத்தையாயிரம் செலவு பண்றீங்க, அதிலே இந்தப் பிசாத்து நூறு ரூபா...''

பேச்சை முடிக்காமல் தடதடவென்று அங்கிருந்து வெளியேறினாள் கேண்ட்டு.

அவளது நடத்தை குறித்து பலவிதக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன..

''பொறாமை, பொறாமைதான்!...''

''ஆமா! அக்கா கலியாணம் இவ்வளவு விமரிசையா நடக்கறதேங்கற பொறாமையிலே இப்படி அசிங்கமா நடந்துக்கிட்டிருக்கா...''

இவ்வளவு பணத்தைக் கொண்டு என்ன செய்திருப்பாள்?

அவள் புடவை அல்லது நகை வாங்கியிருக்கலாம் என்று பலரது ஊகம்.

பெண்ணின் நடத்தையால் மனங்கசந்து விட்டது பெரிய அண்ணிக்கு. ''மல்லிகா கலியாணத்துக்கு வாங்கின புடவை; நகைகள்ளே சிலதைத் தனியா எடுத்து இவளோட்டு கலியாணத்துக்கு வச்சுக்கலாம்னு நினைச்சிருந்தேன். இப்போ 'சீ'ன்னு போயிடுச்சு. இந்த ராட்சசிக்கு ஒண்ணுங் கொடுக்கப் போறதில்லே நான்!... வேலைக்காரங்களுக்கு நடுவிலே என்ன அவமானம்! தூக்குப் போட்டுக்கிட்டுச் சாகலாம் போலே இருக்கு!''

ஆனால் கேண்ட்டுவுக்குப் பேராசை என்றோ, தன் தமக்கை மேல் பொறாமை என்றோ நம்ப முடியவில்லை என்னால்.

அவளை வெளிப்படையாக ஆதரிக்க எனக்குத் தைரியம் இல்லைதான் ஆனால் மல்லிகாவைவிடக் கேண்ட்டுவின் மேல்தான் எனக்குப் பாசம் அதிகம் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆகவே அவளைத் தனிமையில் சந்தித்தேன் ''நான் உன்னைத் திட்ட வரலே. என்கிட்டே சொல்லு, யாராவது உன்னை ஏமாத்திப் பணம் பறிச்சிட்டாங்களா?''

www.padippakam.com

''இல்லே...''

''அந்தப் பையனோட சிகிச்சைக்காகச் செலவு பண்ணினியா?''

கேண்ட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு சொன்னாள், ''சிகிச்சை செய்ய எங்கே முடிஞ்சது? இன்னிக்கு... எரிக்கறதுக்கு விறகு, மத்த சாமான்களுக்காக அவனோட சிநேகிதங்ககிட்டே தொண்ணூறு ரூபா கொடுத்தேன். பத்து ரூபாய்க்குப் பூமாலை...''

வாழ்க்கையில் பலசோக நிகழ்ச்சிகளைச் சந்திந்திருக்கிறேன் என்று கர்வம் எனக்கு இருந்தது. அந்த கர்வம் இப்போது சுக்கு நூறாக நொறுங்கிப் போய்விட்டது.

''முன்னாலேயே ஏன் என்கிட்டே சொல்லல்லே?'' பரிவுடன் அவளைக் கேட்டேன்.

அவள் சற்றுத் திடுக்கிட்டாள் போலும். என் பக்கம் திரும்பிச் சொன்னாள், ''சொல்லலாம்னுதான் நினைச்சேன்... நீங்க எல்லோரும் கலியாண ஏற்பாடுகளிலே மும்முரமாயிருந்தீங்க. உன்னைத் தனியாகப் பார்த்துப் பேச முடியல்லே... இந்தப் பணம் முன்னாலேயே எனக்குக் கிடைச்சிருந்தா... ஒரு சமயம் பிழைச்சிருப்பானோ என்னவோ!''

நான் அவளுக்கு என்ன ஆறுதல் சொல்வேன்?

கேண்ட்டு சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு சிரிக்க முயற்சி செய்து, ''விட்டுடு சித்தப்பா, இதுக்காகக் கவலைப் படாதே! ஒரு விதத்திலே நடந்தது நல்லதுக்குத்தான். அவன் பிழைச்சிருந்தால், 'இந்த வீட்டுப் பொண்ணு ஒரு லாண்டரிக் கடைப் பையனோடே ஓடிப் போயிட்டா'ன்னு உங்களுக்கு எவ்வளவு அவமானம் ஏற்பட்டிருக்கும்!...''

சோகமாகச் சிரித்த அவளது முகத்தைப் பார்த்தபோது எனக்குத் தோன்றியது - இவ்வளவு காலமாக நாங்கள் நினைத்தது போல அசடா இவள்?...

## குறிப்பு:

கதை சிறிதளவு சுருக்கி வெளியிடப்பட்டுள்ளது.

சிந்து பதிப்பக அறக்கட்டளை (273, மகாவீர் காம்ப்ளக்ஸ், சென்னை-14) வெளியிட்ட 'கருப்பு சூரியன்' எனும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதை இது.

தமிழ் மொழியாக்கம்:
சு. கிருஷ்ணமூர்த்தி, புவனா நடராஜன்.

# எப்படி இனிக்கும்?

பிள்ளைகளே,
புரட்சி எத்தனை இனிப்பானது
தெரியுமா?

அதிகாலை எழுந்து
அவசரமாகக் குளித்து
நீங்கள் தின்னும்
தீபாவளிப் பலகாரங்களை விட,

சகல பணிவோடும்
சர்ச்சுகளில் நீங்கள் சுவைக்கும்
அப்பத்தை விட,

பாத்தியா ஓதி
பள்ளிவாசலில் தின்னும்
சர்க்கரையை விட

புரட்சி எத்தனை
இனிப்பானது தெரியுமா?

எப்படி இனிக்கும்?

லட்டுவைப்போலக் கிறங்க வைக்குமா?
சாக்கலேட் போல எச்சில் ஊறுமா?
சொல்லத் தெரியவில்லை எனக்கு.

என்றாலும் - அது
அப்பேர்ப்பட்ட இனிப்பு!

முதல் சாக்கலேட்டுக்காக நீ
அம்மாவிடம் அழுதாயே
அப்பாவிடம் அடம் பிடித்தாயே
அப்போது
உன் நாக்குக்கு மட்டும்
தெரிந்தா இருந்தது
சாக்கலேட்டின் இனிப்பு?


எனக்கும் அப்படித்தான்.

எவ்வளவு அழுகிறாயோ
அவ்வளவு இனிப்பு
எவ்வளவு அடம் பிடிக்கிறாயோ
அவ்வளவு இனிப்பு
எவ்வளவு போராடுகிறாயோ
அவ்வளவு இனிப்பு.

அழு, அடம்பிடி, போராடு.
பொறுக்க முடியாமல் போன பிறகாவது
உன் அப்பன் கேட்க வேண்டும்
''அப்படி என்னதாண்டா இருக்கு -
அந்தப் புரட்சியில்'' என்று.

● **துரை. சண்முகம்**

சென்னையில் நடந்த நவம்பர் புரட்சி நாள் விழாவில் குழந்தைகளின் குதூகலமான பங்கேற்பைப் பார்த்தவுடன் எழுந்தது இந்தக் கவிதை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்கள் இசைவிழா, 6.1.2001 — நிகழ்ச்சிநிரல்

## கருத்தரங்கம் — காலை 10

*தலைமையுரை :*

**காளியப்பன்,** மாநில இணைச் செயலர், ம.க.இ.க.

*முதன்மையுரை :*

**கதிரவன்,** மாநிலச் செயற்குழு உறுப்பினர், ம.க.இ.க.

### சிதம்பரம் - புதிய இரகசியம்

களப்பிரர் காலத்தில் சிதம்பரத்தில் வேத மறுப்பு தத்துவமான சாங்கியம் செல்வாக்குச் செலுத்தி இருக்கிறது. இன்றைய தில்லையம்பலம் பௌத்த நம்பிக்கை சார்ந்த பெண் தெய்வத்தலமாகவும் கலை மையமாகவும் இருந்தது. சமணம்- பௌத்தம் சாங்கியத்தை அழித்து பார்ப்பனியத்தையும் ஆணாதிக்கத்தையும் நிலைநாட்டிய கோர நடனம் தான், ஆடல்வல்லானின் திருநடனம்.

**முனைவர். ரங்கராசன்,**

தமிழ்த்துறை, சிக்கைய நாயக்கர் கல்லூரி, ஈரோடு.

### திரை இசையமைப்பும் இசைக் கலைஞனின் அக எழுச்சியும்

ஒரு கலைப் படைப்பை உருவாக்கும் கலைஞனுக்கு அதற்கான மன எழுச்சி வேண்டும். இன்று பெரும்பான்மை மக்களால் ரசிக்கப்படும் திரை இசையை உருவாக்கும் கலைஞன், அத்தகைய மன எழுச்சியைப் பெறுகிறானா? ஆம் என்றாலும் இல்லையென்றாலும் அதற்கான காரணம் என்ன? திரையிசையில் இன்று நாம் கேட்பவை புதிய ஒலிகளா? புதிய இசையா?

**இசைவாணன்,** திரைப்பட இசையமைப்பாளர்.

### ஓய்வு - பொழுதுபோக்கு - இசைரசனை

உழைப்பின் களைப்பினால் உடல் ஓய்வை நாடும்போது உறக்கம். உழைப்பின் சலிப்பினால் மனம் ஓய்வை நாடும்போது அது பொழுது போக்கு. பொழுது போக்கிலும், இசையிலும் நாம் நாட வேண்டியது புத்துணர்ச்சியையா, புதிய உணர்வையா?

**மருதையன்,** பொதுச் செயலாளர், ம.க.இ.க.

### சாம்பான் - நாடகம்

அடிக்கப்படுவது பறை. வாசிக்கப்படுவது மிருதங்கம். இரண்டு கருவிகளிலும் மரம் ஒன்றுதான். மூட்டப்படும் தோலும் ஒன்றுதான். எனினும், வாசிக்கும் கலைஞர்களின் தோல் வேறாயிற்றே...! இது ஒரு பறை இசைக் கலைஞனின் கதை.

**'ஒத்திகை' நாடகக்குழு,** தஞ்சை.

### தமிழிசைக் கருவி வகைகளும், அவற்றின் உலகளாவிய ஒருமை நிலையும்

தமிழின் சிறப்புத் தன்மையான 'ழ'கரத்தைப் பெயர்களில் கொண்டுள்ள யாழ், குழல், முழவு ஆகிய இசைக் கருவி வகைகள் அடிப் படையில் உலகனைத்தும் ஒரே தன்மையதாகக் காணப்படுகின்றன. ஆனால் இவற்றின் உருவம், வாசிப்பு முறை, ஒலித்தன்மை ஆகியவை வேறுபடுகின்றன. இவ்வொற்றுமை வேற்றுமைகளுக்கான காரணங்கள் என்ன?

**முனைவர். இ. அங்கயற்கண்ணி**

தலைவர், இசைத்துறை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

## கலை நிகழ்ச்சிகள் — மாலை 6

### வில்லுப்பாட்டு

இது பெரிய புராணத்தை விட பெரி..ய்ய புராணம். பெரிய புராணத்தில் அறுபத்திமூன்று நாயன்மார்கள். ஊழல் புராணத்தில்?

**ஆத்தூர் கோமதி குழுவினர்,** நெல்லை

### கட்டபொம்மன் - மேடை நாடகம்

கட்டபொம்மனை எட்டப்பன் இன்று சந்தித்தால்... மன்னிப்புக் கேட்பானா, எள்ளி நகையாடுவானா?

**வி.எம். முருகப்பா குழுவினர், திண்டுக்கல்.**

### கீசக வதம்

பாஞ்சாலியை அந்தப்புரத்திற்கு இழுத்த கீசகனை அணைத்தே கொன்றான் பீமன் என்பது பாரதக் கதை. இன்று 'பாரத மாதாவையே' வெள்ளை மாளிகைக்கு இழுக்கும் அமெரிக்க கீசகனை பீமன் அணைத்துக் கொல்வானா, அணைத்துக் கொள்வானா?

**முருகேசன் குழுவினர்** நாகரசம்பட்டி, தருமபுரி

### நாதசுர இசை

தியாகய்யர் உற்சவத்தில் தண்டபாணி தேசிகர் இறக்கிவிடப்பட்ட காரணம் 'தமிழ்த்தீட்டு'. குழிக்கரை தங்கராசுவும் இருபதாண்டுகளுக்கு முன் அங்கே இறக்கி விடப்பட்டார். காரணம் சாதித்தீட்டு - தீண்டாமை.

**ஆர். தங்கராசு, ஆர்.டி. முருகானந்தம்**
**பி.ஜே. ஜோதிபாசு குழு, குழிக்கரை**

### பாரதிதாசன் பாடல்கள்

**பரவை. முனியம்மா குழுவினர்.**

### களத்துப் பாடல்கள்

கோம்பை. செல்லத்தாயி, ஓகிலாபுரம். காந்தி,
தேவாரம். வெள்ளையம்மாள்

### நையாண்டி மேளம்

**அல்லி நகரம் சுருளிராசன் குழுவினர்,** தேனி

### தப்பாட்டம்

**வீரசோழ தப்பாட்டக் குழு,** ரெட்டிப் பாளையம்.

### திமிரி மேளம், அமாவாசை குழு, மதுரை.

### சிலம்பாட்டம், பஞ்சப்பூர் குழு, திருச்சி

### கழியல் ஆட்டம்

கட்டுமரத் துடுப்புகளேந்திய மீனவர்கள் ஆடும் ஆட்டம்

**புனித அந்தோணியார் குழுவினர்** உவரி, நெல்லை

### நீலகிரி மலைமக்கள் ஆட்டம்,

படுகர் குழு, கோத்தகிரி.

### புரட்சிகரக் கலை நிகழ்ச்சி


**மையக் கலைக் குழு, ம.க.இ.க, தமிழ்நாடு.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

www.padippakam.com

**PUTHIYA KALACHARAM** (TAMIL MONTHLY) REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER NO : 42647/87 Regd. No TN/Chief PMG-303/2000

எட்டாம் ஆண்டு
சனவரி -6, 2001
சனிக்கிழமை
தஞ்சை
திருவள்ளுவர் திடல்











ம.க.இ.க. வின்

# தமிழ் மக்கள் இசை விழா

படிப்பகம்